Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 14 வெள்ளிக்கிழமை (28.03.2014) பக்கங்கள் 20 ஓசை – 178

## கூட்டமைப்பை நம்பியதால் எமக்கு தொடர் ஏமாற்றம்

### சங்கானை பட்டின அபிவிருத்திசபை கவலை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் உணர்ச்சிப் பேச்சுக்களால் எமது வாக்குகளை வழங்கிய போதிலும் இன்றுவரை நாம் ஏமாற்றப்பட்டே வருகின்றோம் என சங்கானை பட்டின அபிவிருத்திச்சபை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சங்கானை மீன்சந்தை தொடர்பிலான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களால் சேகரிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட காணியினை நாம் பிரதேச சபைக்கு வழங்கியிருந்தோம்.

ஆனாலும், குறித்த காணியில் மீன்சந்தை இடமாற்றம் செய்யப்படாது நெருக்கடி மிகுந்த இடத்தில் தற்போது இயங்கி வருவதனால் பல்வேறுபட்ட இடரபாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசு தவறு செய்தால் துணைபோக மாட்டோம்

### யாழ். செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்களின் நலன்களை முன்னிறுத்தி திட்டங்களை முன்னெடுக்கும் அதேவேளை, அரசின் பங்காளிக்கட்சியாக அங்கம் வகிக்கும் நாம் அரசு தவறிழைக்கும் பட்சத்தில் அதற்கு ஒருபோதும் துணைபோக மாட்டோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கிராம சேவையாளர்களுடனான மீள்குடியேற்றம் உள்ளிட்ட விடயங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# நிறைவேறியது தீர்மானம்

## ஆதரவாக - 23 எதிராக - 12 வாக்களிக்காமை - 12

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியுள்ளது.

இலங்கை மீதான மேற்படி தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தீர்மானத்திற்கு ஆதரவாக 23 நாடுகளும் எதிராக 12 நாடுகளும் வாக்களித்தன.

12 நாடுகள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தன.

இந்தியா வாக்கெடுப்பிலிருந்து விலகிக் கொண்டது. இந்தோனேஷியாவும் வாக்கெடுப்பிலிருந்து விலகிக்கொண்டது.

பாகிஸ்தான் இலங்கைக்கு ஆதரவாக தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது. இலங்கை தொடர்பான விசாரணைகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திடம் போதுமான நிதிவளம் இல்லை என்று பாகிஸ்தான் கூறியது.


அதனால் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தாமதப்படுத்த வேண்டும் என்றும் பாகிஸ்தான் கேட்டுக்கொண்டது.

ஆனால், பொதுவான பட்ஜெட்டிலிருந்து இலங்கை விவகாரத்துக்கான தனியான நிதி ஒதுக்கப்படும் என்று ஆணையத்தின் நிதி விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

ஆனால், தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவதை தாமதப்படுத்துவதற்கான கோரிக்கையை ஏற்க முடியாது என்று அமெரிக்கா சுட்டிக்காட்டியது. வாக்களிப்பின் மூலமே நாடுகள் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த

19 ஆம் பக்கம் பார்க்க

## இது அரசுக்கு தெளிவான செய்தி



நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலமாக இலங்கைக்கு மிகத் தெளிவான செய்தி சொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

நிலையான சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நிலைநாட்ட இதுவே தருணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## குடிநீர் பற்றாக்குறை தீவகத்தில் உச்சம்

### அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடிப்பதற்கு நன்னீர் இன்றி தீவக மக்கள் அல்லலுறுகின்றனர்.

குறிப்பாக ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேசத்தில் உள்ள மக்கள் குடிதண்ணீர் இன்றி இடம்பெயருகின்ற கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வலுவான குடிதண்ணீர் திட்டத்தை அரச அதிபர் அமுல்செய்ய முன்வரவேண்டும் என ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எ.அ.யோகநாயகமும், காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு ஆகியோர் நேற்று கூட்டாக கோரிக்கை விட்டுள்ளனர்.

யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் குடாநாட்டு குடிதண்ணீர் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் பிரதேச செயலர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வறட்சிக் காலத்தில் தீவக மக்கள் குடிதண்ணீருக்காக அல்லலுறுகின்ற நிலைமை தொடர்ந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## ஏற்கமுடியாத தீர்மானம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடாத்துமாறு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக ரீதியான நல்லிணக்க முனைப்புக்களையே முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பதவி இழந்தார் விஜயகாந்

யாழ். மாநகரசபை உறுப்பினர் பொன்னையா விஜயகாந் மாநகரசபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக யாழ். தெரிவத்தாட்சி அலுவலரினால் தமக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில நடைபெற்றது. இதன்போதே அவர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார். (பா)

## காலை வாரிவிட்டது இந்தியா



அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காது நடுநிலையாக செயற்பட்டதன்மூலம் இந்தியா தமிழர்களை ஏமாற்றிவிட்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரேரணை மீதான வாக்கெடுப்பு முடிவடைந்த நிலையில் இந்திய தொலைக்காட்சி ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பிரேரணை நிறைவேற்றப்பட்ட நிலையில் பிரேரணை

19 ஆம் பக்கம் பார்க்க

## மிரட்டிப் பணியவைத்தது அமெரிக்கா



உறுப்பு நாடுகளின் மீது அழுத்தங்களை பிரயோகித்தே அமெரிக்கா இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்றியதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தீர்மானத்திற்கு ஆதரவளிக்காவிட்டால் உறவுகளில் விரிசல் ஏற்படும் என சில நாடுகளை அமெரிக்கா எச்சரித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சில நாடுகள்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே ☞ க.பொ.த. (சா/த) தமிழ் மாதிரி வினாத்தாள்

# கிளி.யில் 30 கடைகளுக்கு மூடுவிழா வியாபாரிகள் நடுத்தெருவில்

கிளிநொச்சி கரைச்சி பொதுச் சந்தையில் நேற்று முன்தினம் முப்பது கடைகளுக்கு கரைச்சி பிரதேச சபையினால் சீல் வைத்து இழுத்து மூடப்பட்டுள்ளமையால் வியாபாரிகள் செய்வதறியாது நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றவர்கள் தங்களின் விற்பனை அனுமதியினை புதுப்பிக்காதவர்கள் மற்றும் மாதாந்தம் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்தாவர்கள் எனத் தெரிவித்து முப்பது கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

இது தொடர்பில் சந்தை வியாபாரிகள் கருத்து தெரிவிக்கும் போது மீள்குடியேற்றத்தின் பின்னர் தாங்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த போதும் டிப்போச் சந்திக்கு பொதுச் சந்தை மாற்றப்படும் வரை மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்தாகவும் ஒரு சில வியாபாரிகள் இதனால் இறந்து போனதாகவும் ஆனால் பொதுச் சந்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு டிப்போச் சந்திக்கு அருகில் இயங்க ஆரம்பித்த பின்னர் ஓரளவுக்கு நிம்மதி பெருமூச்சு விட்டு மீண்டு வரும் நிலையில் அவ்வப்போது வந்து போகும் தெருவோர வியாபாரிகளினால் தங்களின் வியாபார நடவடிக்கைகள் தொடந்தும் பாதிக்கப்பட்டு வருகிறது.

எனவே இவ்வாறான தெருவோர சட்டரீதியற்ற வியாபார நடவடிக்கைகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத கரைச்சி பிரதேச சபையினர் எங்களின் விடயத்தில் மாத்திரம் மனிதாபிமானத்திற்கு அப்பால் சென்று நடந்துள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள சொந்த வியாபாரிகள் மீது கரைச்சி பிரதேச சபையினர் இவ்வாறு நடந்து கொண்டமை கவலையளிக்கிறது எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு சந்தையில் மரக்கறி மற்றும் மீன் வியாபாரக் கட்டடங்களைத் தவிர ஏனைய தொகுதிகள் எல்லாம் தற்காலிக தகர கொட்டில்களில் பல துன்பங்களுக்கு மத்தியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருவதாகவும் தங்களின் அவலத்தை தீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை எனவும் வியாபாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (29)

## காப்பற் வீதியாக மாற்றுவதற்கு நடவடிக்கை

(குருநகர்)

குருநகர் ஐந்து மாடிப் பகுதியூடாகச் செல்லும் கடற்கரை வீதி காப்பற் வீதியாக மாற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய தினம் இந்த வீதியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் சென்று பார்வையிட்டுள்ளதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். நகர அமைப்பாளர் றீகன் தெரிவித்துள்ளார். (பா)

## தென்மராட்சியில் மாடுகள் பகிரங்க ஏலம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் மாடுகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை10.30 மணிக்கு ஜே/319 கிராம அலுவலர் அலுவலகத்திற்கு அருகாமையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி முதலியார் வெளி வயற்கரையில் பயிரழிவுகளை ஏற்படுத்திய கட்டாக்காலி மாடுகளே பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளதாக மீசாலை மேற்கு விவசாய சம்மேளன தலைவர் சி.சிவசோதி, சாவகச்சேரி கமநல சேவை திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் த.சத்தியேந்திரன் ஆகியோர் அறிவித்துள்ளனர். (11)


## சிறுவிளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)


# சின்னஞ்சிறு செய்திகள்

## பொதுக் கூட்டங்கள்

சாவகச்சேரி, கல்வயல் சிறிசண்முகானந்த வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபை வருடாந்த பொதுக்கூட்டம் இன்று மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பெற்றோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

▢ ▢ ▢ ▢

(சாவகச்சேரி)

மீசாலை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு மீசாலை விக்னேஸ்வரா மாகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஜே/319 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 16 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரும் கலந்து கொண்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படுவதற்கும், அதனூடாக கிராம அபிவிருத்திக்கு ஒத்துழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## நிர்வாக சபை தெரிவு

வல்வை கணபதி படிப்பகத்தின் 47 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை மறுதினம் பிற்பகல் 4.00 மணிக்கு கணபதி பாலர் பாடசாலை மண்டபத்தில் படிப்பகத் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வடமராட்சி சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பகீரதன் மற்றும் பொலிகண்டி மேற்கு கிராம அலுவலர் சி.தவனேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## இயக்குநர் சபை தெரிவு

(வடமராட்சி)

மருதங்கேணிப் ப.நோ.கூ.சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய இயக்குநர் சபைத்தெரிவும் நாளை சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்க இயக்குநர் சபைத் தலைவரும், மருதங்கேணிப் பிரதேச செயலருமான என்.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறும். இப்பொதுக்கூட்டத்திலும், இயக்குநர் சபைத் தெரிவிலும் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (01)

## மண்டலாபிஷேக பூர்த்தி

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் (பருத்தித்துறை கோட்டு வாசல் அம்பாள்) ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் ஆலய புனராவர்த்தன நவகுண்ட பட்ச அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் மாசி மாதம் 12 ஆம் திகதி பிரம்மஸ்ரீ தானுவாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து தற்போது மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. (01)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மார்க்சிய குழுவின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் பாடசாலைக்கு அண்மையில் உள்ள டி.சி.எம் தனியார் கல்வி நிறுவனத்தில் நாளை மறுதினம் மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2518 திகதி 26-03-2014

ஆங்கில எழுத்து: B

வெற்றி எண்கள்: 05 20 53 57

போனஸ் இல: 50

ஜக்பொட் பரிசு ரூ.**11,847,050/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 246634 | 20/- | 4,932,680/- |
| 2 இல | 17592 | 100/- | 1,759,200/- |
| 3 இல | 355 | 1,000/- | 355,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9722 | 40/- | 388,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 701 | 1,000/- | 701,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,847,050/- | - |
| 1 இல + போனஸ் இல | 11768 | 100/- | 1,176,800/- |
| 2 இல + போனஸ் இல | 566 | 500/- | 283,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 472 | 200/- | 94,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 287856 | | 11,493,960/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.03.29 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 12,520,150/-

(C/3335)

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, ... கொழும்பு - 02

தொ.பே: 2333546/7


## நெடுங்கேணிப் பிரதேசத்தில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு

(நெடுங்கேணி)

நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் பாவனையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீடீரென எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் வெளியிடங்களிலிருந்து வாகனங்களில் வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற நிலையும் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (40)


## 11 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

நெடுந்தீவினைச் சேர்ந்த

அலன்ரின் (உதயன்) கியூறிலூட்சலா



இன்று 28.03.2014 வெள்ளிக்கிழமை
தனது 11 ஆவது பிறந்த நாள் காணும்
அலன்ரின் கியூறிலூட்சலாவை
பல்கலையும் கற்று பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடனும் வாழ
மனதார வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர்
நண்பர்கள்
உறவினர்கள்

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY


(C/3377)

# யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சூழ தமிழ் மன்னர்களின் உருவச்சிலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சூழ சங்கிலியன், பண்டாரவன்னியன், எல்லாளன் ஆகிய தமிழ் மன்னர்களின் உருவச் சிலைகள் நிறுவப்படவுள்ளன.

இரண்டாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிவகாமி சித்திர கோட்டம் சிற்பாலயத்தில் இவை அமைக்கப்பட்டு வருகின்றன.



இதன்போது, வடிவமைக்கப்பட்டு வரும் குறித்த மூன்று தமிழ் மன்னர்களது உருவச்சிலைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டதுடன், அதுதொடர்பில் சிற்பக்கலைஞர் சிவப்பிரகாசத்துடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

குறித்து மூன்று உருவச் சிலைகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனைக்கு அமைவாக மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சூழவுள்ள பிரதான வீதிகளை பார்க்கும் வகையில் நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொது நூலகத்தின் பரீட்சை முடிவுகள்

இணுவில் பொது நூலகத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு,

**பொது அறிவுப் போட்டியில்.**

**ஆரம்பப்பிரிவு:** ப.தனுராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி) கே.சிறிநாராயணி (வேம்படி மகளிர் கல்லூரி) க.கனேக்ஷ் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு:** ந.சிவமைந்தன், ச.டினுஷாந், ஜெ.அபில்ராஜ் ஆகியோர் (யா/இந்துக் கல்லூரி)

**மத்தியபிரிவு** கே.யதுஷன், வே.தவீஷன், சு.திவாகரன் ஆகியோர் (யா/இந்துக் கல்லூரி)

**மேறப்பிரிவு:** இ.சுலனியா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) க.சிவகாயத்திரிநாயகி (தெ/மகாஜனாக் கல்லூரி) ஜீ.அபிராமி (இந்து மகளிர் கல்லூரி)

**சதுரங்கம்:**

15 வயது ஆண்கள் இ.அரன் (யா/இந்துக் கல்லூரி) சு.கலைநிலவன், தி.சாரூபன் (தெ/யூனியன் கல்லூரி).

**19 வயது ஆண்கள்:**

எஸ்.அபிராம் (தெ/மகாஜனாக் கல்லூரி) பி.விதுரன், ஜி.கஜேந்திரன் (கொக்குவில் இந்து கல்லூரி).

**15 வயது பெண்கள்:** எஸ்.மதுஷனா (யூனியன் கல்லூரி) ஜீ.தர்ஷிகா, கே.டிலானி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**19 வயது பெண்கள்:** டி.மிதுஷா (கொக்குவில் இந்து) ஜே.சஞ்சிதா, ஆர். விதுஷா (தெ/யூனியன் கல்லூரி). (48)

# மகளிர் தின நிகழ்வு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் நடாத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளாக யா.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அதிபர் திருமதி செ.சுந்தரேசனின், "மகளிரின் மேன்மை" என்ற விடயம் பற்றியும், திருமதி கே.சிந்துராவின் "அவளது சக்தி தேசத்தின் சக்தி" என்னும் விடயம் பற்றியும் உரையாற்றவுள்ளனர்.


தொடர்ந்து இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி, ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.இ.சிவயோகநாயகி, யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி. செ.சுந்தரேசன், ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி ஜெ.கணேசரட்ணம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் இன்றைய சமூக முன்னேற்றத்துக்கு பெரிதும் துணை செய்பவர்கள் உழைத்து வாழும் பெண்களா? அல்லது வீட்டில் பணி செய்யும் பெண்களா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# விவசாயிகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு

2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குரிய விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் தபால் நிலையங்கள் ஊடாக விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும் என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது. ஓய்வூதியம் பெறத் தகுதியான 1,28,000 விவசாயிகளும் தாம் விண்ணப்பித்த தபாலகங்கள் ஊடாக இன்று தமது ஓய்வூதிய பணத்தைப் பெறமுடியும்.

பெப்ரவரி மாதத்துக்கான ஓய்வூதிய கொடுப்பனவுக்காக சுமார் 17 கோடி ரூபாவை கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை நேற்றுமுன்தினம் தபாலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது என சபையின் பணிப்பாளர் நாயகம் பண்டுக்க வீரசிங்க அறிவித்துள்ளார். (48)




கச்சாய் அன்னை திரேசா முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கழகத் தலைவர் லயன்.த.இரவீந்திரன் வழங்குவதையும், அருகில் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் காணலாம்.

# ஜெனிவாத் திருவிழாவுக்குப் போன 'பாம்பாட்டிப் படை'




வெள்ளவத்தையிலிருக்கிற 'வசந்தம்' என்ற கடையில் இந்த மாதம் அமர்க்களமான வியாபார்ரம்.

ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கும் [இலங்கைக்கு எதிரான தீர்மானங்களின் பேரிலான] திருவிழாவில் 'பாம்பாட்டப்போகிற' தமிழ் அரசியல்வாதிகள், அப்படியே ஒரு சுற்றுச் சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி என்று தங்களின் சொந்த பந்தங்களிடமும் போகிறார்களல்லவா!

அப்படிப்போகும்போது வெறுங்கையுடன் போக முடியாது என்று 'வெள்ளவத்தை வசந்தத்தில்' மிளகாய்த்தூள், லட்டு, பயத்தம்பணியாரம், முறுக்கு, பகோடா எனப் பலதையும் பத்தையும் வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

கொண்டுபோனதில், நவநீதம்பிள்ளை அம்மாவுக்கும் குடுப்பார்களோ என்னவோ...

ஜெனிவாவில் இவர்கள் என்னமாதிரியான 'வெங்காயத்'தைப் புடுங்குகிறார்களோ இல்லையோ சொந்தபந்தங்களைப் பார்த்து, உறவு கொண்டாடி சந்தோசம் பாராட்டிவிட்டு வருவது மட்டும் தப்பாமல் நடக்கிறது.

புலம்பெயர் நாடுகளிலுள்ள பலர் இந்த ஜெனிவாவை வைத்துக்கொண்டே தங்களுடைய பிள்ளைகளுடைய சாமத்தியச் சடங்கையும் கலியாணங்களையும் நடாத்துகிறார்கள்.

இவர்களும் தங்களுடைய அண்ணன், தம்பி அக்கா, தங்கை சித்தப்பா, பெரியப்பா குடும்பத்தையும் பார்க்கிறதாகவும் ஆச்சு. அப்பிடியே அவையின்ரை குடும்பங்களில் நடக்கிற கொண்டாட்டங்களில கலந்து கொள்கிறதாகவும் ஆச்சு.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதை எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் இப்படித்தான் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்ச்சனங்கள் இப்படி மொக்குத்தனமாகவும் மொண்ணையர்களாகவும் இருக்கும்வரையிலும் அவர்களுடைய தலையில் இப்படி எவரும் மிளகாயை அரைக்கத்தான் செய்வார்கள்.

'ஜெனிவாவில் வைத்து மகிந்த ராஜபக்ஷவின் 'ஆட்சி ரேகை'யை முடித்துக் காட்டுகிறோம், அவரைக் காட்டுக்கோ சிறைக்கூட்டுக்கோ அனுப்பி வைக்கிறோம் பாருங்கள்' என்று சொல்லிக்கொண்டு போனவர்களெல்லாம் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எங்கள் 'தங்கத் தமிழர்கள்' கொஞ்சம் அறிய வேணும்.

ஜெனிவாவில் எடுக்கப்படும் தீர்மானங்களால் இலங்கைக்கும் தமிழர்களுக்கும் என்ன மாதிரியான நன்மைகள் கிடைக்கும் என்று இதுவரையிலும் ஒருத்தரும் தெளிவாகச் சொல்லவில்லை. அதை அறிய வேணும் என்று எங்கள் தமிழர்கள் விரும்பவும் இல்லை.

ஆனாலும் இந்த 'ஜெனிவாத் திருவிழா', நல்லூர்த்திருவிழாவைப் போல வருடா வருடம் வரக்கூடிய ஒன்றாக மாறீட்டுது. [நல்லூர்த்திருவிழாவுக்கு நாங்கள் வாறம். ஜெனிவாத் திருவிழாவுக்கு நீங்கள் வாங்கோ']

எனவே இதை இப்போதைக்கு முடிவுக்குக் கொண்டு வரக்கூடாது என்றும் இவர்கள் விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் இது நடந்தால்தான் இதை ஒரு வாய்ப்பாக வைத்துக் கொண்டு எங்கள் சொந்த பந்தங்கள் குறைந்த செலவில் ஐரோப்பிய நாடுகளுக்கு வந்து போக முடியும் என்று புலம்பெயர்ந்த மக்களும்....

ஜெனிவாத் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் நடந்தால்தான் இதை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு புலம்பெயர்ந்த உறவுகளைப் போய்ப்பார்த்து நாலு காசு சேர்த்துக் கொண்டு வரலாம் என்று நாட்டிலுள்ள அரசியல்வாதிகளும்....

இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்கிறோம்... குற்றவாளிகளைக் கூண்டில் அடைக்கிறோம் என்று காட்டிக் கொண்டு, இதற்கான தீர்மானத்தைத் தவணைமுறையில் ஒத்திப் போட்டுக்கொண்டே தங்களுக்குத் தேவையான காரியங்களைப் பார்த்துக் கொள்ளும் மேற்கு நாடுகளும்...

பாவம் தமிழ் மக்கள் – இலவு காத்த கிளிகள். குளம் வற்றும் வரை காத்திருந்து வாடிச் சாகும் கொக்குகள்....

இப்ப ஜெனிவாவில் பிரதேச சபை உறுப்பினர்களில் இருந்து சிவாஜிலிங்கம் போன்ற மாகாணசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று ஒரு பெரிய [பாம்பாட்டிப்] படையே நிற்கிறது.

ஜெனிவாவில் நடக்கிறது ஏதோ பெரிய போர்க்களம் என்ற மாதிரி யாழ்ப்பாணத்திலிருந்து வருகிற 'செத்தவீட்டுப்'பத்திரிகை 'ஜெனிவாவுக்குப் படையெடுத்தது கூட்டமைப்பின் எம்பிக்கள் குழு' என்று செய்தி வேறு போட்டிருக்கு.

அங்கே போன படைத்தளபதிகள் ஆளையாள் பார்த்துக் கொள்ள முடியாமல் அனந்தி ஒரு பக்கம் சிறிதரன் ஒரு பக்கம் சுமந்திரன் இன்னொரு பக்கம் எண்டு திரிகினம். நல்ல வேளை விக்னேஸ்வரன் போகவில்லை. அவரும் போயிருந்தால் இன்னும் கூட்டமைப்பு நாறியிருக்கும்.

இந்தச் 'சீத்துவக்கேட்டை' எப்பிடி மறைக்கிறது என்று தெரியாமல் நல்ல சில உள்ளங்கள் வெம்பிக் கண்ணீர் விட்டதையும் கண்டேன்.

இவர்கள் எல்லாம் ஜெனிவாவில் 'பாம்பாட்டிகளா'கவே வேடிக்கை காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

சில நேரங்களில் புத்தி வெற்றி பெறுகிறது. பல நேரங்களில் வெற்றியே புத்தியாகிவிடுகிறது.

-கவிஞர் கண்ணதாசன்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 2014 ஜெனிவா படையெடுப்பு!

தமிழர்கள் படையெடுத்துச் சென்று கங்கை கொண்டு, கடாரம் வென்றெல்லாம் திரும்பியிருக்கிறார்கள். செங்குட்டுவன் கண்ணகி சிலைக்குக் கல் எடுப்பதற்காக, இமயமலை வரை படை நடத்திச் சென்று வெற்றிவாகை சூடியிருக்கிறான்.

அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற படையெடுப்புகள் எல்லாம் இந்தியாவிற்குள்ளும் மிஞ்சி மிஞ்சிப் போனால் அருகாமைத் தீவுகள் பிரதேசங்கள் ஆன யாவா, சுமாத்திரா, இலங்கை போன்றவற்றை வெற்றிகொண்டு மீண்டதாகத்தான் வரலாறு!

ஆனால் இன்றைய இலங்கைத் தமிழர்களின் சார்பாக மகுடம் தரித்திருக்கும் மாமன்னர்களான தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் படையெடுப்பு, கடலான கடல்களெல்லாம் கடந்து ஜெனீவா வரை நடந்திருப்பதாக அவர்களது பத்திரிகை தெரிவித்திருக்கும் செய்தி, தம்மை அசல் தமிழ் வித்துக்களாக உணரும் ஒவ்வொருவருக்கும் முதுகுத்தண்டில் சிலிர்ப்பை ஏற்படுத்தியிருக்கும் என்பது உண்மை.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன், வீரபாண்டியன், மாறவர்மன் வகையறாக்கள் செய்ததெல்லாம் வெறும் ஜ"ஜ"பி என்று வரலாற்றில் பதிவாகப் போகும் மாபெரும் படையெடுப்பு இதுதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், படையெடுத்துச் செல்கிற இவர்கள் தம் கையில் எடுத்துப்போகிற "ஆயுதங்களை" வெள்ளவத்தைக் கடையொன்றில் வைத்துப் பார்த்த நண்பர் அங்கிருந்து உடனே போனடித்துச் சொல்லியதாக வடபுலத்தான் எழுதியிருப்பதைப் பார்க்கும்போதுதான் கொஞ்சம் உதைக்கிறது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவினது பிரேரணைக்கு ஆதரவாக சர்வதேச நாடுகளையெல்லாம் வெல்லப்போகிற தமிழ்த் தேசியப் படையெடுப்புக்கு, எதற்காகக் கையில் பயத்தம் பணியாரம், பருத்துறை வடை, பகோடா, முறுக்கு, மிளகாய்த் தூள், மிக்சர் பைக்கற்றுகளெல்லாம்?

70களில் றேடியோவில் பிரபலமான "முகத்தார் வீடு" நாடகம் என்று நினைவு. தனது மகனின் கல்வி விஷயமாக அதிபரை கொழும்பு சென்று சந்திப்பார் முகத்தார். என்ன விஷயமாக வந்திருக்கிறியள் என்று அதிபர் கேட்பார். "கையில கறுத்தக் கொழும்பானையும் யாழ்ப்பாண முருங்கைக்காய்க் கட்டையும் கண்டவுடன மாஸ்ரருக்கு விசயம் ஓடி வெளிச்சிருக்க வெல்லே வேணும்..." என்று சிரிப்பார் முகத்தார்.

அந்தமாதிரி, நவநீதம்பிள்ளை மற்றுமற்றும் சர்வதேச பிரதிநிதிகளையும் மடக்கத்தான் மிக்சர், வடைப் பைக்கற்றுகளுடன் போயிருக்கிறார்களா நம்மவர்கள்? இருக்கும்... "அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவாக சர்வதேச நாடுகளைத் திரட்டி பிரேரணையை வெல்லவைத்துவிட்டே நாடு திரும்புவோம்" என்று அங்குசென்ற தமிழ்ப் படையின் தளபதி ஜெனீவாவில் வைத்து முழங்கியிருப்பதாக "படையெடுப்பு புகழ்" பத்திரிகையின் நேற்றைய செய்தி கூறுகிறது.

பனம்பழம் தானாக விழத்தான் போகிறது என்று தெரிந்து கொண்ட காகமானது அந்தப் பனங்காய்க் குலையில் போய் உட்காரக் கூடாதா என்ன? பனம்பழம் விழுந்தால் போதும் என்று ஆவலோடு பார்த்திருக்க ஆக்களை "செற்"பண்ணி விட்டால், பழம் விழும்போது காகம் பனை வட்டுக்குள் பறக்க வேண்டியதுதான் அதன் சாமர்த்தியம்!

உள்ளூரில் உழத் தெரியாத மாடுகள் வெளியூரில் நன்றாக உழுகிறது சொன்னால் நம்பிவிடும் கதியில்தான் நமது மக்கள் இருக்கிறார்கள். வெளியூரில் உழுதுவிட்டு வந்தால் உள்ளூரில் பயிர் விளையும் பாருங்கள் என்று இவர்கள் சொல்வதை, நாமும் இன்னும் எவ்வளவு காலத்துக்கு கேட்டுக்கொண்டிருக்கப் போகிறோம். பார்க்கலாம்.

- ஆசிரியர்

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினால்

# அரசுக்கு ஆதரவு அளிக்க முடியும்

## என்கிறார் லக்ஷ்மன் கிரியல்ல

(கொழும்பு)

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதன் மூலம் சர்வதேச அழுத்தங்களை ஈடு செய்ய முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு போன்றவற்றை அரசாங்கம் உரிய முறையில் நிலைநாட்டினால், சர்வதேச அழுத்தங்களிலிருந்து மீள்வதற்கு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளினால் இலங்கை பிளவுபடுத்தப்படும் என்ற அரசாங்கத்தின் கருத்தில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட உள்ள தீர்மானமானது நாட்டுக்கு எதிரானதல்ல. அது அரசாங்கத்திற்கு எதிரானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமை குறித்தே தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாக பலர் கருதுவதாகவும் உண்மையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை தீர்மானத்தின் ஓர் அங்கம் மட்டுமே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்மானத்தின் 80 வீதமான விடயங்கள் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டாக இணைந்து கையொப்பமிட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை அமுல்படுத்துமாறே கோரிக்கை விடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### புதுவருடத்தை முன்னிட்டு

# விசேட பஸ், ரயில் சேவைகள் ஏப்ரல் 8 முதல் ஆரம்பம்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் பயணிகளுக்கு தடங்கலின்றி சொந்த இடங்களுக்குச் சென்று வருவதற்காக ஏப்ரல் 8 முதல் விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் நடைபெற்றது. இதில் போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, பொலிஸ், ரயில்வே, நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, உள்ளூராட்சி சபைகள், வவுனியா, யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் அரச அதிபர்கள் பங்கேற்றனர்.

பண்டிகையை முன்னிட்டு கூடுதலான தூர சேவை பஸ்களை ஈடுபடுத்தவும் நேர அட்டவணைக்கு மேலதிகமாக தேவைக்கேற்ப 24 மணி நேரமும் பஸ் சேவை நடத்தவும் இங்கு முடிவு செய்யப்பட்டது.

பஸ்ரியன் மாவத்தையில் இருந்து ஏப்ரல் 8 முதல் 16ஆம் திகதி வரை சகல பிரதான நகரங்களுக்கிடையிலும் தூர சேவை பஸ்கள் நடத்தப்படும் இதற்கென பஸ்களுக்கு தற்காலிக பயணிகள் அனுமதிப்பத்திரம் வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பு திரும்பவும் ஏனைய இடங்களுக்குச் செல்லவும் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். 24 மணி நேரமும் இந்த விசேட சேவை முன்னெடுக்கப்படும்.

# தமிழக மீனவர்கள் 19 பேர் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுப்பட்ட குற்றச்சாட்டில் 19 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட போதே 4 படகுகளுடன் தமிழக மீனவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக, கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களை பொறுப்பேற்றுள்ளதாகவும், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கடற்றொழில் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# 100 கோடி கேட்டு பொன்சேகா வழக்கு

(கொழும்பு)

பெற்றோலிய வளத்துறை பிரதியமைச்சர் சரண குணவர்தனவிடமிருந்து 100 கோடி ரூபா நட்டஈடு கேட்டு ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத்பொன்சேகா கல்கிஸை மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் வைத்து முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மீது இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதல் தொடர்பில் தனியார் வானொலியொன்றுக்கு பிரதியமைச்சர் தெரிவித்த கருத்துத் தொடர்பிலேயே அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரதியமைச்சர் சரண குணவர்தனவுக்கு பிஸ்கால் ஊடாக நோட்டீஸ் அனுப்புமாறு மாவட்ட நீதவான் நிஹால் சந்திர ரணவக்க பணித்தார்.

# சீனப் பிரதிநிதிகள் குழு இலங்கை வருகை

(கொழும்பு)

சீனாவின் வர்த்தகப் பிரதிநிதிகள் குழு ஒன்று இந்த வாரம் இலங்கை வரவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி முதல் அந்தக் குழு இலங்கைக்கு விஜயம் செய்து, பல்வேறு வர்த்தக வாய்ப்புகள் தொடர்பில் ஆய்வு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விஜயத்துக்கான ஏற்பாடுகளை இலங்கை வர்த்தக சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ளது.

இலங்கையில் தரகு தொழில், இலத்திரனியல் உற்பத்திகள், இரும்பு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி, தேயிலை உள்ளிட்ட பல்வேறு தொழிற்துறைகளில் முதலீடு செய்வது தொடர்பில் சீனா பிரதிநிதிகள் அவதானம் செலுத்தவுள்ளனர்.

# பல்கலைக்கழகங்கள் மூன்றில் விரைவில் பொறியியல் பீடங்கள்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சினால் வெகுவிரைவில் பல்கலைக்கழகங்கள் மூன்றில் பொறியியல் பீடங்களை புதிதாக ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜயவர்த்தனபுர, யாழ்ப்பாணம், தென்கிழக்கு பல்கலைக் கழகங்களிலேயே இப் பொறியியல் பீடங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த தெரிவித்தார்.

இலங்கையில் பொறியியலாளர்கள் மிகக் குறைவாக இருப்பதனாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யாருக்கு எதிராக சர்வதேச விசாரணை?

**புலிகள் அமைப்பின் தலைமைத்துவம் அழிக்கப்படும் வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புலிகளின் சகல நடவடிக்கைகளையும் நியாயப்படுத்திக் கொண்டு புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு இருந்தது. அதே கூட்டமைப்பு புலிகளுக்கு எதிராகவும் விசாரணை நடாத்த வேண்டும் என்று கூறும் போது அது விந்தையாகத் தான் இருக்கிறது.**

நாட்டில் நடப்பவற்றைப் பார்க்கும் போது அரசாங்கம் தனக்கெதிரான சர்வதேச விசாரணை முயற்சிகளை தடுத்துக் கொள்ளுமா என்பது சந்தேகமே.

உள்நாட்டு தேர்தல் வெற்றிகளை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் சர்வதேச சமூகத்தை ஆத்திரமூட்டி சர்வதேசத்திடமிருந்து பிரச்சினைகளை வரவழைத்துக் கொள்ள முயற்சிக்கிறது என ஐக்கிய தேசிய கட்சி கூறுகிறது.

இந்த சர்வதேச விசாரணை யாருக்கு எதிராக நடைபெறும்? இலங்கை அரச படைகளுக்கு எதிராகவா? அல்லது அரச படைகளுக்கும் அவற்றுக்கு கட்டளையிட்ட அரசியல் தலைவர்களுக்கும் எதிராகவா? அல்லது அவ்விருசாராருக்கும் (அதாவது பொதுவாக அரசாங்கத்திற்கும்) புலிகள் இயக்கத்திற்கும் எதிராகவா?

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கையிலும் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள நகல் பிரேரணைகளிலும் சர்வதேச விசாரணை என்று பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளதேயொழிய யாருக்கு எதிராக என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் அரசாங்கமும் புலிகளும் என்ற இரு சாராரும் கடந்த காலத்தில் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறுகிறது.

கடந்த 14ஆம் திகதி அதாவது அமெரிக்கா நகல் பிரேரணையை சமர்ப்பித்ததன் பின்னர் அது தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் கையெழுத்திட்டு ஒரு செய்தி அறிக்கையை வெளியிட்டு இருந்தனர். அதில் சர்வதேச விசாரணை என்று வரும் பல இடங்களில் "இரு சாராரினதும்" மனித உரிமை மீறல்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நேரடியாக கூறாவிட்டாலும் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவடைந்த பின்னர் சர்வதேச சமூகமும் "இரு சாராரினதும்" மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியது. பான்-கி-மூனினால் நியமிக்கப்பட்ட தருஸ்மான் குழுவும் "இரு சாராருக்கும்" எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே கூறியது.

கைது செய்யப்பட்டவர்களை கொன்றமை, மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடாத்தியமை, பொது மக்கள் தங்கியிருந்த இடங்கள் மீது ஷெல் தாக்குதல் நடாத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அதில் அரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்பட்டிருந்ததோடு புலிகளுக்கு எதிராக சாதாரண மக்களை கேடயமாக பாவித்தல், அதிலிருந்து தப்பிக்க முயற்சித்த மக்களைக் கொலை செய்தல், மக்கள் மத்தியில் இருந்து இராணுவ தளபாடங்களை உபயோகித்தல், சிறுவர்களை பலவந்தமாக படையில் சேர்த்தல், தற்கொலை குண்டுகளை பாவித்து சாதாரண மக்களைக்கொலை செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் பட்டியலொன்று அதில் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கருத்தைத் தான் சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. எனவே நவநீதம் பிள்ளையின் அறிக்கையிலும் அமெரிக்காவின் நகல் பிரேரணைகளிலும் சர்வதேச விசாரணை என்று பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இந்த விசாரணை "இரு சாராருக்கும்" எதிராகவே நடைபெறப் போவதாகவே ஊகிக்க வேண்டியுள்ளது.

ஆனால் அண்மைக் காலத்தில் சர்வதேச சமூகம் புலிகளுக்கு எதிரான எந்தவொரு குற்றச்சாட்டையும் துல்லியமாகக் குறிப்பிடவில்லை. மாறாக அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தான் அடிக்கடி குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. சனல் 4 தொலைக்காட்சிச் சேவை போன்றவையும் அரச படைகளின் மனித உரிமை மீறல்களுக்கான உதாரணங்களை மட்டுமே வழங்கி



வருகின்றன.

அதேவேளை அரசாங்கமும் சிங்கள அமைப்புக்களும் சர்வதேச விசாரணை என்ற கருத்தை அடியோடு மறுத்து வந்துள்ளன. இக் காரணங்களினால் உலகெங்கும் தமிழ் அமைப்புக்கள் சர்வதேச விசாரணையொன்றை மென்மேலும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது ஊடக அறிக்கையில் இரு சாராரும் செய்த குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடாத்த வேண்டும் என்று கூறுகிறது. இது கூட்டமைப்பு இக் கருத்தை முன்வைத்த முதலாவது முறையல்ல. இதற்கு முன்னர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனியார் சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றின் போதும் இக்கருத்தை வலியுறுத்தியிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக கூட்டமைப்பு வடமாகாண சபைத் தேர்தலுக்காக சமர்ப்பித்திருந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இக் கருத்து உள்ளடக்கப்பட்டு இருந்தது.

**இரு சாராருக்கும் எதிரான விசாரணையாக அமைந்தால் மட்டுமே சர்வதேச விசாரணையானது நம்பகத் தன்மையுடையதாக அமையும். வடக்கில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களுக்கு அரசாங்கமும் தெற்கில் பஸ், ரயில் குண்டுத் தாக்குதல்களுக்கு புலிகளும் குறைந்த பட்சம் வருத்தமாவது தெரிவிக்கும் நிலை வந்தால் மட்டுமே நல்லிணக்கம் என்பது அர்த்தபூர்வமாக அமையும்.**

ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்த விடயத்தில் குழப்பமடைந்து இருப்பதாகவும் தெரிகிறது. உதாரணமாக அண்மையில் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள வடமாகாண சபையில் சர்வதேச விசாரணை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இரு சாராரினதும் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து இருக்கவில்லை. அது அரசாங்கத்திற்கு எதிரான விசாரணையை கோரும் பிரேரணையாகவே அமைந்திருந்தது. அது கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மாறான கருத்தாகும்.

**அண்மையில் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள வட மாகாண சபையில் சர்வதேச விசாரணை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இரு சாராரினதும் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து இருக்கவில்லை. அது அரசாங்கத்திற்கு எதிரான விசாரணையை கோரும் பிரேரணையாகவே அமைந்திருந்தது. அது கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மாறான கருத்தாகும்.**

■ **எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து**

அதேவேளை புலிகள் அமைப்பின் தலைமைத்துவம் அழிக்கப்படும் வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புலிகளின் சகல நடவடிக்கைகளையும் நியாயப்படுத்திக் கொண்டு புலிகளை தமிழ் மக்களின ஏகப் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு இருந்தது. அதே கூட்டமைப்பு புலிகளுக்கு எதிராகவும் விசாரணை நடாத்த வேண்டும் என்று கூறும் போது அது விந்தையாகத் தான் இருக்கிறது.

புலிகளுக்கு எதிராகவும் விசாரணை நடத்த வேண்டும் என்ற கருத்தையும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கி தேர்தலில் குதித்த கூட்டமைப்பு உண்மையிலேயே புலிகளின் பெயரிலேயே மக்களிடம் வாக்குக் கேட்டது என்றும் கூறலாம்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரான விக்னேஸ்வரன் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்த இடமான வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ஒரு தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசும் போது புலிகளும் பிரபாகரனும் பயங்கரவாதிகள் அல்லவென்றும் அவர்கள் விடுதலைப் போராளிகள் என்றும் கூறினார்.

இது ஊடகங்களில் வெளியான போது அவ்வாறாயின் விக்னேஸ்வரன் நீதிமன்றத்தில் கடமையாற்றும் போது எந்த அடிப்படையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை தண்டித்தார் என சிங்கள மற்றும் ஆங்கில பத்திரிகைகள் கேள்வி எழுப்பியிருந்தன.

இந்தப் தேர்தல் பிரசாரத்தின் சுபாவத்தின் காரணமாகவோ என்னவோ புலிகளின் ஆதரவாளர்கள் பலர் மாகாண சபைக்குத் தெரிவானார்கள். புலிகளின் பொறுப்பாளராகவிருந்த எழிலனின் மனைவி அனந்தி சசிதரன் முதலமைச்சருக்கு அடுத்தபடியாக கூடுதலான விருப்ப வாக்குகளைப் பெற்றார்.

அவ்வாறானவர்களின் செல்வாக்கினாலேயே சர்வதேச விசாரணைக்கான பிரேரணை மாகாணசபையில் இலகுவாக நிறைவேற்றப்பட்டது. அது மட்டுமல்லாது சர்வதேச விசாரணையை வலியுறுத்த அனந்தியை ஜெனிவா நகருக்கு அனுப்பவும் மாகாண சபை முடிவு செய்தது.

இப்போது அரசாங்கத்தினதும் புலிகளினதும் செயற்பாடுகள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடாத்தவேண்டும் என சம்பந்தனும் விக்னேஸ்வரனும் கொழும்பில் இருந்து அறிக்கை விடுகிறார்கள். ஜெனிவாவில் பிரசாரத்தில் ஈடுபட்டு இருக்கும் எழிலனின் மனைவி அனந்தி புலிகளுக்கு எதிராகவும் விசாரணை நடாத்த வேண்டும் என்று கூறுவாரா?

நாம் முன்னர் கூறியதைப் போல் சர்வதேச விசாரணையை தடுத்துக் கொள்ள அரசாங்கத்திற்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. அந்த சர்வதேச விசாரணை நடைமுறை நிலைக்கு வந்தால் தாம் எதற்காக இலங்கை விடயத்தில் சர்வதேச விசாரணை நடாத்த முற்பட்டோம் என்று சர்வதேச சமூகம் பழைய ஆவணங்களை புரட்டிப் பார்க்கும்.


அப்போது விசாரணை அனேகமாக இரு சாராருக்கும் எதிரானதாக அமையலாம். ஏனெனில் அது அந்த விசாரணையின் நம்பகத் தன்மைக்கு அத்தியாவசியமானதாக இருக்கும்.

நவிப்பிள்ளைக்கு முன்னர் மனித உரிமை ஆணையாளராகவிருந்த லுவி ஆபரும் இக் கருத்தை வலியுறுத்தியிருந்தார். சர்வதேச விசாரணை மூலம் புலிகளின் நடவடிக்கைகளும் ஆராயப்படும் பட்சத்தில் தமிழர்கள் புலிகளை போற்றிப் புகழும் நிலை தடுக்கப்படும் என்றும் அதன் மூலம் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்குகிறது என்று கூறி தமது இராணுவ மயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது அரசாங்கத்திற்கு கடினமாக அமைந்து விடும் என்றும் அவர் வாதிடுகிறார்.

இரு சாராருக்கும் எதிரான விசாரணையாக அமைந்தால் மட்டுமே சர்வதேச விசாரணையானது நம்பகத் தன்மையுடையதாக அமையும். அப்போது அதனை தென் பகுதி மக்களாலும் எதிர்க்க முடியாது போய்விடும். "இரு சாரார்" தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது அறிக்கையில் குறிப்பிட்டது அந்த அடிப்படையில் என்றால் அதை ஏனைய வெளிநாட்டு தமிழ் அமைப்புக்களும் எதிர்ப்பது கடினமாகும். ஏனெனில் வடக்கில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களுக்கு அரசாங்கமும் தெற்கில் பஸ், ரயில் குண்டுத் தாக்குதல்களுக்கு புலிகளும் குறைந்த பட்சம் வருத்தமாவது தெரிவிக்கும் நிலை வந்தால் மட்டுமே நல்லிணக்கம் என்பது அர்த்தபூர்வமாக அமையும். ●

# புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு

# கனேடிய தமிழருக்கு 2 வருட சிறை



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்த குற்றச்சாட்டில், கனேடியக் குடியுரிமை பெற்ற தமிழ் இளைஞருக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையை அமெரிக்க நீதிமன்றம் விதித்துள்ளது.

பிரதீபன் நடராஜா என்ற 37 வயதுடைய ஈழத்தமிழருக்கே, அமெரிக்க நீதிமன்றம் கடந்த செவ்வாயன்று இந்தத் தண்டனை அறிவித்துள்ளது.

ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான, ஏவுகணைகள், ஏ.கே-47 துப்பாக்கிகளை தமிழ்ப் போராளிகளுக்காக வாங்க முயன்றதாக இவர் உள்ளிட்ட குழுவினர் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர்.

பிரதீபன் நடராஜா, ஏற்கனவே 16 மாதங்கள், கனடாவிலும், அமெரிக்காவிலும் சிறை வாசம் அனுபவித்துள்ளார்.

இவர் தனது தவறை ஒப்புக்கொண்டு அமெரிக்க நீதிமன்ற நீதிபதிக்கு மன்னிப்புக் கோரும் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

எனினும் அமெரிக்க நீதிமன்றம் இவருக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

இதன் பின்னர் இவர் கனடாவுக்கு நாடு கடத்தப்படலாம்.

கனேடிய பொலிஸாரும் அமெரிக்காவின் எவ்.பி.ஐ புலனாய்வு பிரிவும் இணைந்து நடாத்திய விசாரணையின் மூலம், தண்டனை பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ள, வட அமெரிக்காவில் இயங்கி வந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிதி மற்றும் விநியோக வலையமைப்பைச் சேர்ந்த ஆறாவது கனேடியத் தமிழர் இவராவார்.

இந்தக் குற்றச்சாட்டில் ரொறனடோவில் கைது செய்யப்பட்ட பிரதீபன் நடராஜா, மேலதிக விசாரணைகளுக்காக 2012ஆம் அண்டு அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்படையினருக்கு பயிற்சி இந்தியா இணக்கம்

இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் பயிற்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது என இந்தியா தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப மற்றும் தொழில் நுட்பம் சாராத அடிப்படையில் கடற்படையினருக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது, என குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தப் பட்டுள்ளது.

# 14 பல்கலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தடை

(கொழும்பு)

களனி பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேரின் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு மகர நீதவான் நீதி மன்றத்தால் தடை விதிக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

நீதிமன்ற தடையை மீறி கடந்த 19ஆம் திகதி களனி பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணைக்கான உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறியதை அடுத்தே இவர்கள் தடுத்தே வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுடைய பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கும் நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதியால் பாக்கு உற்பத்தியாளர் பாதிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாக்கை, இந்தியாவிற்கு மீள் ஏற்றுமதி செய்வதனால் நாட்டின் பாக்கு தொழிற்துறைக்கு பாதிப்பு ஏற்படுவதாக விவசாய ஏற்றுமதி திணைக்களம் தெரிவிக்கின்றது.

வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் பாக்கை, இலங்கைக்குரியது எனத் தெரிவித்து, மீள் ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகள் இடம் பெறுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் லயனல் குணரத்ன கூறினார்.

இதனால் இலங்கை பாக்கு ஏற்றுமதிக்கு இந்தியாவினால் விதிக்கப்படும் வரி மானியத்தை இழப்பதற்கு நேரிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்த நடவடிக்கையினால், உள்நாட்டு பாக்கு செய்கையாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என லயனல் குணரத்ன கூறினார்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான வர்த்தக உறவுகள் இதனால் பாதிக்கப்படக் கூடுமெனவும் விவசாய ஏற்றுமதி திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்கள் ஏப்ரல் முதல் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர்

பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை ஏப்ரல் மாதம் முதல் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஷெனிகா ஹிரும்புரேகம் குறிப்பிட்டுள்ளார.

2013 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இசற் புள்ளிகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் இதுவரை வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டினார்.அதனால் 2013 ஆம் ஆண் டுக்கான மாணவர்களுக்கான இசற் புள்ளிகளை இந்தமாத இறுதியில் பரீட்சைகள் திணைக்களம் வெளியிடும்

இந்த நிலையில், 2013ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மாணவ குழாம், ஆகஸ்ட் மாதமளவில் பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும்

இதேவேளை மாணவ சங்கங்கள் அமைதியற்ற முறையில் செயற்படுகின்றமையினால், குறிப்பிட்ட சில பாடத்திட்டங்களை ஆரம்பிப்பதில் இடையூறு



ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள், இல்லாத பிரச்சினையொன்றை உருவாக்க முயற்சிக்கின்றனர்

எவ்வாறாயினும், 96 வீதமான பாடநெறிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# கதையை கட்டவிழ்த்து விட்டு வெற்றி பெற முனைகிறது அரசு

## என்கிறார் சோமவன்ச

(கொழும்பு)

மின்சாரக் கதிரை பற்றிய கதையைக் கட்டவிழ்த்துவிட்டு, அதன்மூலம் மாகாணசபைகளை வெற்றிகொள்ள முனைகிறது அரசாங்கம் என ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவிக்கிறார்.

மாத்தறையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஆட்களுக்கு விசேடமாகச் சொல்ல வேண்டும். அரசாங்கக் கட்சியினர் சொல்வதை நீங்கள் நன்கு காது கொடுத்துக் கேட்பீர்கள்தானே. இப்போது பொதுமக்களுக்கும் அது நன்கு தெரியும்.

மாகாண சபை பற்றி ஒருவரும் பெரிதாகப் பேசுவதில்லை. பேசுவதெல்லாம் ஜெனிவா மாநாடு பற்றி மட்டுமே! மின்சாரக் கதிரை பற்றி மட்டுமே! அது மட்டுந்தான் பிரச்சினையாக இருக்கிறது. இப்போது ஜெனிவாவிலிருந்து வெளியேறவே முயற்சிக்கிறார்கள். சிறந்த முறையில் வாக்குகளை அளித்து அரசாங்கத்தை வெற்றி பெறச் செய்யுமாறு சொல்கிறார்கள.

இந்த விடயங்களுக்காக பொதுமக்கள் ஏமாறக் கூடாது. உங்கள் அனைவரையும் முட்டாளகள் ஆக்கவே அரசாங்கம் முயல்கிறது. ஜெனிவா பிரேரணை வாக்களிப்பது இங்குள்ள ஆளுங் கட்சியோ எதிர்க்கட்சியோ அல்ல இவ்விரண்டு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் அல்ல. அதற்கு வாக்களிக்க 47 நாடுகள் உள்ளன.

உண்மையில் இந்த ஜெனிவாவின் மூலம் என்னதான் நடைபெறுகிறது? இன்றுவரை ஜனாதிபதி ஒன்றும் தெரியாதவர் போலவே பேசுகின்றார். வெளியிலிருந்து எங்களுக்கும் அதில் இணைந்துகொள்ளுமாறு அல்லவா கூறுகிறார்.

2009 இல் ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் என்ற முறையில் பான் கீ மூனை வரச் சொன்னார். அவரும் வந்தார். வந்தபிறகு ஜனாதிபதி கடிதமொன்று எழுதி கையெழுத்திட்டார். அதில், இந்நாட்டின் எதனையும் உங்களுக்கு ஆய்வு செய்யலாம் என அங்குவைத்துக் கூறினார். என அவர் மேலும் தெரிவித்தார்.

# பயணச்சீட்டு மோசடிகளால் ரயில்வேக்கு வருமானம் இழப்பு

(கொழும்பு)

ரயில் பயணச்சீட்டு மோசடிகள் காரணமாக, வருடாந்தம் 5 தொடக்கம் 10 வீத வருமானம் இழக்கப்படுவதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிடுகின்றது.

13,855 பயணிகளிடம் இருந்து அபராதமாக ஒரு கோடியே 79 ஆயிரத்து 605 ரூபா அபராதமாக அறிவிடப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பொது முகாமையாளர் சிசிர குமார கூறினார்.

ஆயினும், இவர்களைத் தவிர நாளாந்தம் பெரும் எண்ணிக்கையிலான பயணிகள் பயணச்சீட்டு இன்றிப் பயணிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனைத்தவிர, பயணச் சீட்டுக்கு பொருத்தமற்ற பெட்டிகளில் பயணித்தல், காலாவதியான பயண அட்டைகள் பயன்படுத்தல் போன்ற சம்பவங்களும் இடம்பெறுவதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டது.

இதற்கமைய, ரயில்வே திணைக்களத்தினால் அரசாங்கத்திற்கு வருடாந்தம் 10 வீதம் வரை வருமானம் இழக்கப்படுவதாக திணைக்களத்தின் பொது முகாமையாளர் சிசிர குமார மேலும் தெரிவித்தார்

# கிழக்கு பல்கலையின் 18 ஆவது பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் 18ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 05ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழகத்தின் நல்லையா மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜா தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இரண்டு நாட்கள் இந்த பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் அவை ஒரு நாளாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று சுற்றுக்களாக இந்த பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின்போது 754 பேர் பட்டம் பெறவுள்ளதாகவும், இதில் முதல் தொகுதியில் 207 மாணவர்களும், இரண்டாவது தொகுதியில் 243 மாணவர்களும், மூன்றாவது தொகுதியில் 304 மாணவர்களும் பட்டங்களைப் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிதுள்ளார்.



திருகோணமலை கிண்ணியா பிரதேசத்திலுள்ள ஆற்றில் பாம்புகளை ஒத்த அரியவகை உயிரினங்கள் மீண்டும் கடந்த புதன்கிழமை முதல் படையெடுத்துள்ளன. இந்த அரியவகை உயிரினம் மீண்டும் படையெடுத்துள்ளதால் இயற்கை அனர்த்தம் ஏற்படுவ தற்கான சமிக்ஞையாக இருக்கலாமென கிராமவாசிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



தென்னிந்தியாவின் சன் தொலைக்காட்சியினால் நடாத்தப்பட்ட சன்சிங்கர் நிகழ்வில் கலந்து கொண்டு சன்சிங்கர் விருது பெற்ற கைதடி மைந்தன் பவானந்தன் சுபவீனனுக்கான பாராட்டு விழாவும், சுபவீனனின் குரலில் உருவான "சுபவீனனின் சுபகானம் 11" என்னும் இறுவட்டு வெளியீடும் அண்மையில் கைதடி கலை இலக்கிய பேரவையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுபவீனன் கௌரவிக்கப்படுவதையும், தென்னிந்தியாவில் இடம்பெற்ற சன்சிங்கர் நிகழ்வில் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மற்றும் கங்கை அமரன் ஆகியோர் அவரைக் கௌரவிப்பதையும் காணலாம். (51)

# பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம்

# யாழ்.மாவட்டத்திலும் முன்மொழிய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மட்டும் 440 கிராமங்களுக்கான பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் முன்மொழியப்படவுள்ளது.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு திட்டம் என்ற அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவில் உள்ள 440 கிராம அலுவலர் பிரிவிற்கும் 440 பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் முன்மொழியப்படவுள்ளது.

2014 முதல் 2018 வரை செயலில் உள்ளதாக 4 ஆண்டுகளுக்கான பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் பணி யாழ் மாவட்டத்தில் 13 பிரதேச சபைகள், 3 நகர சபைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு 'நெல்சிப் திட்டம்' மூலம் மக்களினால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களுக்கு அபிவிருத்திகள் இடம்பெற்றன.

இதேபோன்று கிராமத்துக்கான ஓர் திட்டத்தின் கீழ் முன்மொழியப்படும் அபிவிருத்தி திட்ட அவுஸ்ரேலிய நிதி மூலம் அடுத்த நான்கு ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளும் கிராமத்துக்கான ஓர் திட்டத்தை தயாரித்து வழங்கவுள்ளன.

எனினும். இத்திட்டத்தின் இறுதித் தெரிவு ஏன்பது எதிர்காலத்தில் சபையின் உறுப்பினர்களே தீர்மானிப்பர்.

இதனால் இத்திட்டம் நீடித்து இருக்குமா அல்லது வேறு திட்டங்கள் முன்வைக்கப்படுமா எனும் கேள்விகளும் தற்போது உள்ளூராட்சி தலைவர்களால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (92)

# வங்கி ஊழியர் தாக்கப்பட்டார்

அச்சுவேலி பகுதியில் அமைந்துள்ள பிரதான வங்கி ஒன்றின் ஊழியர் ஒருவரை பத்தமேனி பகுதி வெளிநபர் ஒருவர் தாக்கிய சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில், குறித்த நபர் வங்கி ஒன்றில் கடன் பெற்றுள்ளார் அதனை அந்த நபர் திருப்பிச் செலுத்தாத பட்சத்தில் வங்கி ஊழியர் பணத்தை திரும்பச் செலுத்தும்படி அறிவிப்பதற்காக அந்த நபரின் வீட்டிற்குச் சென்ற வேளையில் வங்கி ஊழியர் அங்கு தாக்கப்பட்டுள்ள தாகத் தெரியவருகின்றது. (85)

# முரசின் இன்றைய பலன்



(28.03.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 14 ஆம் திகதி.
பிரதோஷ விரதம். துவாதசி / திரயோதசி .
சதயம் நட்சத்திரம் பி.இ. 04.19 வரை. பின் பூரட்டாதி.
இராகு காலம் 10.44 - 12.14 வரை. சுபநேரம் 06.14 - 07.44 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நான் என்ற அகந்தை மேலிட்டதால் முரண்பாடு ஏற்படல், நீண்ட நாள் கிடப்பில் இருந்த நிலுவை கிடைக்கப்பெறல். |
| ரிஷபம் | பணிபற்றிய தோல்விப் பயத்தினால் மன நெருக்கடி ஏற்படல், புதிய நிலம் சொத்து வாங்கலாம். |
| மிதுனம் | திட்டமிட்ட செயலின்மையால் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம், புதிதாக தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தல். |
| கடகம் | இலக்குகளை வகுத்துக் கொள்ளாமையால் பணி முடிவின்றி இழுபடல், தாயின் திடீர் சுகயீனத்தால் கவலையுறல். |
| சிம்மம் | வாழ்க்கை பற்றிய சிந்தனை மேலிட்டதால் பதகளிப்பு நிலை, போட்டிகளில் சாதனையும் பாராட்டும் கிடைத்தல். |
| கன்னி | வேலைகளைத் தள்ளிப்போட்டதால் அதிகாரியுடன் முரண்பாடு, இழுபட்டுக் கொண்டிருந்த வெளியூர் பயணம் கைகூடல். |
| துலாம் | குடும்பப் பொறுப்பைச் சுமக்க பிரயத்தனம் செய்ய முற்படல், ஏழரைச் சனியினால் புதிய முயற்சியைத் தொடங்க விரும்பாது ஒத்திவைத்தல். |
| விருச்சிகம் | பொருளாதாரப் பாதுகாப்பில் கூடிய சிரத்தை எடுத்தல் அவசியம், வெளியூரிலிருந்து உறவினர் வருகையினால் மகிழ்ச்சியடைதல். |
| தனுசு | ஒரு முகப்படுத்தாத பணி விடயம் வேலைப்பளுவினைத் தக்க வைத்தல், செய்யும் தொழில் பதவிக்கு பிரமுகர் சிபார்சு செய்யப்படல். |
| மகரம் | மனக்குழப்பம் மேலிட்டதால் திரிசங்கு நிலைதடுமாறல், தனிவழி செல்கையில் திடீர் பயத்தினால் மனம் பதகளிப்படைதல். |
| கும்பம் | பணத்தைப் பெரிதாக மதித்ததினால் உறவில் விரிசல் ஏற்படல், புதிய பதவி கிடைக்கும் செய்தி வந்தடைதல். |
| மீனம் | ஜாதகக் கணிப்பின் வழுவால் முற்றாகும் நிலையில் இருந்த விவாகம் கைவிடல், புதிய ஜீவன் தோன்றிவிட்டதினால் மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்படல். |

# அறநெறிப் பாடசாலையின் இந்து சமயப் போட்டிகள்

(சாவகச்சேரி)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இந்து சமயப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக அறநெறிப் பாடசாலை காப்பாளர் கலாநிதி பா.நிமலதாசன் தெரிவித்துள்ளார்.

இன்று மாலை 4.30 மணிக்கு தரம் 1, 2, 3 மாணவர்களுக்கு ஆத்திசூடி போட்டி நடைபெறவுள்ளது. இதன்போது 15 ஆத்திசூடி ஒழுங்கு முறைப்படி இராகத்துடன் இசைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் தரம் 4 முதல் 11 வரையான மாணவர்களுக்கு பஞ்ச புராண போட்டி ஒழுங்கு முறைப்படி இராகத்துடன் இசைக்கப்படல் வேண்டும். தரம் 3 முதல் 7 வரையான மாணவர்களுக்கு 3 மணித்தியாலத்துக்குள் தோரணம் பின்னும் போட்டியில் 20 நிமிடங்களுக்குள் 5 தோரணங்களை பின்னுதல் வேண்டும். தரம் 8 முதல் 11 வரையான மாணவர்களுக்கு 10 நிமிடத்துக்குள் 5 தோரணங்களை சிறப்பாக அமைத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அறநெறிப்பாடசாலையில் அங்கத்தவர்களாக இருப்பதோடு போட்டிகள் நடைபெறும் குறித்த நேரத்துக்கு முன்னதாக சமூகமளித்தல் வேண்டும். மேலும் போட்டிக்குரிய பரிசளிப்பு நிகழ்வு ஆலய தீர்த்தத் திருவிழா அன்று மாலை நடை பெறவுள்ளதோடு நடுவர்களின் தீர்ப்பே இறுதி யான தீர்ப்பாக கருத்தப்படும்.

எனவே போட்டிகளை திறமையாக நடாத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இராஜேந்திராஜீயின் அருளுரைகள்

(யாழ்ப்பாணம்)

இந்து ஸ்வய சேவா சங்கத்தின் பிரதேச இணைப்பாளர்களின் ஏற்பாட்டில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த இந்து ஸ்வய சேவா சங்கத்தின் பிரசங்க சுவாமி இராஜேந்திராஜீ யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிற்கும் விஜயம் செய்து அருளுரை வழங்கியுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை புத்தூர் சனசமூக நிலையத்திலும், கோப்பாயிலுள்ள முன்பள்ளி நிலையத்திலும், அருளுரைகள் நடைபெற்றன.

16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதனார் மட ஸ்ரீ ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை மண்டபத்திலும், சுன்னாகம் கதிரை மலைச்சிவன் கோவிலிலும், தெல்லிப்பளை மீள்குடியேற்றப் பகுதியில் அமைந்துள்ள சனசமூக நிலையத்திலும், இணுவிலுள்ள ஆசிரியை திருமதி.கணேசபிள்ளை இல்லத்திலும் மேற்படி அருளுரை இடம்பெற்றன. (06)

# விதாதா வள நிலையத்தின் இலவச தொழிற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் இயங்கும் விதாதா வள நிலையம் ஊடாக இலவச தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சித் திட்டத்தின் மூலம் இளைஞர், யுவதிகள் தமது சுயதொழில்களை முன்னேற்றவும், புதிய சுயதொழில் முயற்சியை மேற்கொள்வதற்கும் ஏற்ற வகையில் இப்பயிற்சி அமையும் என யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

மேற்படி இந்தத் தொழில் பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரதேச செயலகங்களில் இயங்கும் விதாதா வள நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமது விண்ணப்பப்படிவங்களை பெற்றுப் பூர்த்தி செய்து வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த தொழில் பயிற்சியில் கணனி வன்பொருள், இணைய வடிவமைப்பு, ஊதுபத்தி, மெழுகுதிரி, சவர்க்காரங்கள் வடிவமைப்பு மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் அறிமுகம் போன்ற பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (48)

# மியாமி ஓப்பன் ரென்னிஸ் பெடரர் வெளியேற்றம்

(மியாமி)

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டியில் சுவிஸின் ரொஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேற்றப்பட்டார்.

அமெரிக்காவின் மியாமி நகரில் சோனி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. உலகின் இரண்டாம் நிலை வீரரான ஜோகோவிச் (சேர்பியா) காலிறுதியில் 6ஆம் நிலை வீரர் முர்ரேயை (இங்கிலாந்து) எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு காலிறுதியில் 5ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிஸ்) அதிர்ச்சிகரமாக தோற்றார். 20ஆம் நிலை வீரரான நிஷிகோரி (ஜப்பான்) 3-6, 7-5, 6-4 என்ற கணக்கில் பெடரரை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நா லீ (சீனா) 7-5, 7-5 என்ற நேர்செட் கணக்கில் வோஸ்னியாக்கியையும் (டென்மார்க்), சிபில் கோவா 3-6, 7-6 (7-5), 6-3 என்ற கணக்கில் ரட்ன்வன்ஸ்காவையும் (போலந்து) தோற்கடித்து அரையிறுதியில் நுழைந்தனர்.

# சம்பியன் பட்டத்தை உறுதி செய்தது முனிக்



(பேர்லின்)

ஹெர்தா பேர்லின் அணிக்கு எதிரான பன்டஸ்லிகா தொடரின் லீக் போட்டியில் வெற்றி பெற்ற பேயார்ன் முனிக் அணி சம்பியன் பட்டத்தை உறுதி செய்தது.

ஜேர்மனியில் உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் ஜேர்மன் பன்டஸ்லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் பேயார்ன் முனிக், ஹெர்தா பேர்லின் அணிகள் மோதின. போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய முனிக் அணிக்கு டோனி கிராஸ் (6ஆவது நிமிடம்), மரியோ (14ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். இதற்கு பேர்லின் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் பேர்லின் அணிக்கு ஏட்ரியன் (66ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு முனிக் வீரர் பிரான்க் ரிபரி (79ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். இறுதியில், பேயார்ன் முனிக் அணி, 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தற்போது 27 போட்டிகளில் ஐந்து வெற்றி பெற்றுள்ள முனிக் அணி 77 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இன்னும் 7 போட்டிகள் எஞ்சியுள்ள போதும் வேறு எந்த அணியும் சம்பியன் பட்டம் வாய்ப்பு இல்லை. இதையடுத்து இம்முறை பேயார்ன் முனிக் அணி கோப்பை வெல்வது உறுதியானது.



# விருது வென்ற கார் பந்தய வீரர்

(கோலாலம்பூர்)

உலகின் சிறந்த வீரருக்கான லோரஸ் விருதை, ஜேர்மனி பார்முலா-1 கார்பந்தய வீரர் செபாஸ்டியன் வெட்டல் முதன் முறையாக பெற்றார்.

லோரஸ் உலக விளையாட்டு விருது கடந்த 2000ஆம் ஆண்டு முதல், வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான விருது பட்டியலுக்கு, உசைன் போல்ட் (தடகளம்), கிறிஸ்டியானோ ரொனால்டோ(கால்பந்து), ரபெல் நடால் (ரென்னிஸ்), செரீனா வில்லியம்ஸ் (ரென்னிஸ்), இசின்பெயவா (தடகளம்) உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டனர். விருது வழங்கும் விழா மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சிறந்த வீரருக்கான விருதை, பார்முலா-1 கார்பந்தயத்தில் தொடர்ந்து நான்கு முறை உலக சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டல், (வயது-26) வென்றார். இவர், முதன்முறையாக இவ்விருது வென்றார். ஜேர்மனியின் மைக்கல் சூமாக்கருக்கு (2002, 2004) பின், இவ்விருது வென்ற பார்முலா-1 கார்பந்தய வீரர் என்ற பெருமை பெற்றார்.

சிறந்த வீராங்கனைக்கான விருதை அமெரிக்காவின் நீச்சல் வீராங்கனை மிஸ்ஸி பிராங்க்ளின் (வயது-18) முதன் முறையாக தட்டிச் சென்றார். இதன்மூலம் இளம் வயதில் இவ்விருது வென்ற முதல் வீராங்கனை என்ற சாதனை படைத்தார்.


ஸ்பெயின் ரென்னிஸ் வீரர் ரபெல் நடாலுக்கு, சிறந்த எழுச்சி வீரர் விருது கிடைத்தது. இவர், 2011இல் சிறந்த வீரருக்கான விருது வென்றார். சிறந்த அணிக்கான விருது, ஜேர்மனியை சேர்ந்த பேயர்ன் முனிக் கால்பந்து அணிக்கு வழங்கப்பட்டது. விளையாட்டு உணர்வுடன் நடந்து கொண்ட அணிக்கான விருது, ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணிக்குக் கிடைத்தது.

# ஜொலிக்கும் வெல்ஸ்

பங்களாதேஷில் நடைபெற்று வரும் ருவென்ரி-20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில், முதல் முறையாக ஒளிரும் ஸ்டம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்டம்பிலும், அதன் மீது வைக்கப்பட்டிருக்கும் இரண்டு வெல்சிலும் குறைந்த மின்னழுத்தம் கொண்ட பற்றரிகளுடன், எல்.இ.டி. பல்கள் பொருத்தப்பட்டுள்ளன. பந்து தாக்கி வெல்ஸ் கீழே விழுந்ததும் சில வினாடிகள் அது ஜொலிக்கிறது. வெல்ஸ்சில் இருந்து அனுப்பப்படும் ரேடியோ சிக்னல் மூலம் ஸ்டம் சிவப்பு நிறத்தில் மின்னுகிறது. ஒளிரும் ஸ்டம் தொழில் நுட்பம் சர்ச்சைக்குரிய அவுட்டுகளுக்கு தீர்வு காண வசதியாக இருப்பதோடு, இரசிகர்களுக்கும் இது புது அனுபவமாக அமைந்துள்ளது.

இது குறித்து எல்.இ.டி. ஸ்டம்புகளை கண்டுபிடித்தவரான புரோன்ட் எக்கெர்மானிடம் கேட்ட போது, இது மிகவும் விலை மதிப்புடைய தொழில்நுட்பம் ஆகும். ஒரு ஆட்டத்திற்கு இந்தத் தொழில் நுட்பத்தை அமைத்து முழுமையாக பயன்படுத்துவதற்கு 25 இலட்சம் செலவாகிறது. எனவே எந்த வித வெற்றி கொண்டாட்டத்தின் போதும் ஸ்டம்ங்களை பிடுங்குவதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம். ஆனால் டோனிக்கு, ஸ்டம்புகளை நினைவுப்பொருளாக பத்திரப் படுத்துவது என்றால் மிகவும் இஷ்டமான விடயம் என்பதை நாங்கள் அறிவோம். எனவே இந்திய அணி இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றினால், அவருக்காக சில ஏற்பாடுகளை (ஸ்டம்களை வழங்குவது) செய்யலாம்.

ஒளிரும் ஸ்டம்பை உருவாக்க வேண்டும் என்ற எனது கனவு நனவாக ஏறக்குறைய 3 ஆண்டுகள் ஆனது. ஆனால் இந்த யோசனை உதயமாவதற்கு காரணம் எனது குட்டி மகள் தான். ஒரு நாள் எனது மகள், ஒளிரும் பந்துடன் விளையாடிக் கொண்டிருந்தாள். பந்து கீழே



விழுந்து துள்ளிய போதெல்லாம் அதில் உள்ள விளக்கு எரிந்தது. இதைப் பார்த்த பின்னர் தான், கிரிக்கெட்டை மேலும் வண்ணமயமாக்க ஒளிரும் ஸ்டம்களை ஏன் தயாரிக்கக் கூடாது என்ற சிந்தனை எனக்குள் தோன்றியது. எல்லாம் சரியாக இருக்கிறது என்று உறுதி செய்யப்பட்ட பின்னர், அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையை அணுகினேன்.

அவர்களின் அனுமதியுடன் முதல் முறையாக பிக்போஷ் கிரிக்கெட் போட்டியில் ஒளிரும் ஸ்டம்களை பயன்படுத்தினேன் எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

## இன்றைய ஆட்டங்கள்

™
ICC WORLD
TWENTY20
Bangladesh 2014

**அவுஸ்ரேலியா எதிர் மேற்கிந்தியத்தீவுகள்**
**இடம்: மீர்புர் நேரம் : 3.00 மணி**

**இந்தியா எதிர் பங்களாதேஷ்**
**இடம் : மீர்புர் நேரம் : 7.30**

# போராடி வென்றது தென்னாபிரிக்கா

நெதர்லாந்து அணிக்கெதிரான ருவென்ரி-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி போராடி வென்றது. ஐந்தாவது உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் குழு ஒன்றில் அங்கம் வகிக்கும் தென்னாபிரிக்க, நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று பங்களாதேஷின் மிர்புரில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி ஜமிலின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் அம்லா ஒரு முனையில் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அம்லா 20 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 43, டி வில்லியர்ஸ் 21, கப்டன் பிளிசர்ஸ் 24, மில்லர் 17, டுமினி 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜமில் 19 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 146 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நெதர்லாந்து அணிக்கு மைபுர்கி சிறப்பாக ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தார். இருப்பினும் மைபுர்கியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து நெதர்லாந்து அணி சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. குறிப்பாக, இம்ரான் தாஹிர் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நெதர்லாந்து அணி 18.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் மைபுர்கி 28 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 51, கூப்பர் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இம்ரான் தாஹிர் நான்கு, ஸ்ரெய்ன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



# நடுவர் சங்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான 108ஆவது இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நடாத்த முடியாமல் போனமைக்கு மத்தியஸ்தர்கள் எந்த வகையிலும் காரணமாக இருக்கவில்லை என யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13,14,15ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி கைவிடப்பட்டது.

இப்போட்டி குறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது. இதன் விபரம் வருமாறு: வடக்கின் பெரும் போட்டி கிரிக்கெட் விதிகளுக்கமையவும், மேலும் இரு கல்லூரித் தரப்பினால் ஏற்கனவே இணங்கப்பட்ட சில நடைமுறைகளுக்கமைவாகவே நடாத்தப்பட்டு வருகின்றது. அவற்றுக்கமையவே மேற்படி போட்டியை மத்தியஸ்தர்கள் நடுநிலை யுடன் மத்தியஸ்தம் வகித்திருந்தனர்.

சர்வதேச கிரிக்கெட் விதியின் பிரிவு 27.9 மற்றும் 28.1 ஏ,பி என்பவற்றுக்கமைவாகவே மத்தியஸ்தரின் நடவடிக்கை அமைந்திருந்தது. போட்டியைத் தொடர்ந்து நடாத்த முடியாமல் போனமைக்கு மத்தியஸ்தர்கள் எந்த வகை யிலும் காரணமாக இருக்கவில்லை எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

# வென்றது பல்கலை, ஜொனியன்ஸ் அணிகள்




(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடாத்தப்பட்டு வரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பல்கலை மற்றும் ஜொனி யன்ஸ் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இச்சுற்றுப்போட்டித் தொடரின் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ்ப் பாணப் பல்கலைக்கழக அணி 48.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ்.அச்சுதன் 40, என்.சற்குணேஸ்வரன் 39, விஸ்ணுராம் 31, யோகேஸ்வரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் எஸ்.கபி லன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 215 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 35.2 ஓவர்கள் நிறைவில் 120 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சரன்ராஜ் 56 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் எஸ்.அச்சுதன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியின் எஸ். அச்சுதன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் யாழ். சென்றல் அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி 39 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சலிஸ்ரன் 31, ஜசிந்தன் 28, றோகான் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிருந்தாபன், லவேந்திரா ஆகியோர் தலா மூன்று, அகிலன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிற ஜொனியன்ஸ் அணி 37.5 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் றஜிந்தன் 52, லவேந்திரா 29 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் அன்புஜன் 23, ரட்ணம் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபதீஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்ட நாயகனாக லவேந்திரா தெரிவு செய் யப்பட்டார். ஏனைய போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வலய மட்ட பெண்கள் கால்பந்து நாவாந்துறை றோ.க. சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட பெண்கள் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் சம்பியன் பட்டத்தை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட பெண்கள் கால்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியும், சென். சாள்ஸ் மகாவித்தியாலய அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டத் திறனை போட்டிக் களத்தில் வெளிப்படுத்தின. இதன் காரணமாக போட்டி நிறைவுற்ற வேளை இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சிறப்பாகச் செயற்பட்ட நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. இதேவேளை, கடந்த மூன்று வருடங்களாக வலய மட்டப் போட்டி யில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் சம்பியன் பட்டத்தை வென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்பிரிவின் மூன்றாமிடத்தை சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய அணி பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (105, 42)

# அனுமதி பெறாத போட்டிகளுக்கு சட்டநடவடிக்கை தாச்சி சங்க ஒழுக்காற்றுக்குழு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதி பெறப்படாத தாச்சிப் போட்டி களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஒழுக்காற்றுக் குழு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

தாச்சிச் சங்கத்தின் அனுமதிகள் பெறப்படாமல் போட்டிகள் நடாத்தப் படுகின்றமையால் பல்வேறு பிரச்சினை கள் ஒழுங்கீனங்கள் இடம்பெறுவதாக கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படை யில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறப்படாமல் போட்டிகள் இடம்பெறுகின்றமையால் அனுமதி பெற்று போட்டிகளை நடாத்தும் அணி களது போட்டிகளுக்கு சிக்கல் எழுகின் றது. இதன் காரணமாகவும் கட்டுக்கோப் பாக தாச்சிப் போட்டியினை வளர்த் தெடுக்கும் முகமாகவுமே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் தெரிவித்துள்ளது.

இம் முடிவுகளை மீறுவோரின் மீது சங்க யாப்பு விதிமுறைகளுக்கமைவாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ள தாக யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (48)

# இளையோர் விளையாட்டு விழா விண்ணப்பிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடாத்தவுள்ள இளையோர் விளை யாட்டு விழாவில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் பிற்பகுதியில் கொழும் பில் நடைபெறவுள்ள இப் போட்டி நிகழ்வில் பங்குகொள்ள விரும்பும் வீர,வீராங்கனைகள் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்க செயலாளர் சுகிர்தன் அல்லது யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்க இணைப்பாளர் சுபாஸ்கரன் ஆகியோரிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (93)

# கயிறுழுத்தலில் வென்றது பன்னாலை கணேசன்

தெல்லிப்பளை பிரதேச இளைஞர் கழக அணிகளுக் கிடையிலான கயிறுழுத்தல் போட்டியில் பன்னாலை கணேசன் இளைஞர் கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

தெல்லிப்பளை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான கயிறுழுத்தல் போட்டிகள் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.இப் போட்டியில் பன்னாலை கணேசன் இளைஞர் கழக அணியும், இளவாலை சென். லூட்ஸ் இளைஞர் கழக அணியும் மோதியது.

இதில் 2:1 என்னும் புள்ளிகள் அடிப்படையில் பன்னாலை கணேசன் இளைஞர் கழக அணி இளவாலை சென்.லூட்ஸ் இளைஞர் கழக அணியை வென்றது. (48)

# இளைஞர் கழக கரப்பந்து இணுவில் கலைஒளி சம்பியன்

(உடுவில்)

உடுவில் பிரதேச இளைஞர் கழக அணி களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் இணுவில் கலைஒளி அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம் மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் பெரு விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் கடந்த வாரம் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சுன்னாகம் நியூவொரியர்ஸ் அணியும், இணுவில் கலைஒளி அணியும் மோதின. இதில் இணுவில் கலைஒளி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

ஏனைய பெருவிளையாட்டுப் போட்டிகள் நடை பெற்று வருவதாகவும், மெய்வல்லுநர் போட்டி கள் அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெற ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# நாவற்குழி அண்ணா சம்பியன்





(மட்டுவில்)

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் நாவற்குழி அண்ணா இளைஞர் கழக அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற் போது நடைபெற்று வருகின்றன.

இதில் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 23ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் நாவற்குழி அண்ணா இளைஞர் கழக அணியும், ஸ்ரீமகாவிஷ்ணு இளைஞர் கழக அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத் திய நாவற்குழி அண்ணா இளைஞர் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (48)

# நிகழ்ச்சி நிரல் இந்த அளவுக்கு போலியானதாக இருக்கும் போது...!

– சாலையூரான் –


இனப்பிரச்சினைக்கான தீர்வில் இலங்கை அரசுடன் முரண்படாத ஒரு அணுகு முறையை கடைப்பிடிப்பதில் தனது விருப்பத்தை பாரதிய ஜனதா கட்சி வெளிப்படுத்தி இருக்கிறது.

சென்னையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில், அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான வெங்கையா நாயுடு இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை காக்க தமது கட்சி உறுதி பூண்டுள்ளதாக குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையின் அரசியலமைப்பிற்கு உட்பட்டதாகவே எந்தவொரு தீர்வும் இருக்க வேண்டுமென்றும் எக்காலத்திலும் பிரிவுபடாத ஒரு நாடாக இலங்கை இருப்பதையே தாம் விரும்புவதாகவும் நாயுடு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஜெனிவா கூட்டத்தொடரில் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அதன் ஆணையாளர் நாயகம் சமர்ப்பிக்கவிருக்கும் இலங்கை மீதான பிரேரணையை ஆதரிக்கப் போவதாக புதுடில்லி வட்டாரங்களில் இருந்து வெளியான தகவலைத் தொடர்ந்து, தமிழர் விவகாரத்தில் இலங்கையுடன் இணங்கிச் செல்வதில் தாம் குறியாக இருப்பதை பாரதீய ஜனதா கட்சி வெளிப்படுத்தி இருக்கிறது.

பதவியில் இருக்கும் காங்கிரஸ் தலைமையிலான அரசு இலங்கைத் தமிழர்கள் பற்றி அசமந்தப் போக்கை கொண்டிருப்பதாக தமிழக கட்சிகள் போர்க்கொடி தூக்கியிருந்தன. இந்த நிலையில், இன்னும் சில வாரங்களில் இந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்கவிருப்பதாகக் கருதப்படும் பா.ஜ.க., இலங்கை விவகாரத்தை கையாள்வதில் இலங்கை அரசுடன் இணைந்த ஒரு அணுகுமுறை பற்றி, பேசியிருப்பது கவனத்துக்குரிய விடயமாகும்.




மறுபுறத்தில் இலங்கைக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் நேரடியான தமது மேலாண்மையை சற்று மட்டுப்படுத்திக் கொண்டு உறுப்பு நாடுகளே அதனை தீர்மானிக்க வேண்டும் என்றொரு கருத்தை ஐ.நா. செயலரின் பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் ஊடகவியலாளரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதில் மனித உரிமைகள் சட்டத்தரணி யஸ்மீன் சூகா, பிரித்தானிய மனித உரிமைகளுக்கான சட்டப்பேரவை என்பன இலங்கைக்கெதிராக முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஐ.நா. பேச்சாளர் எந்தக் கருத்தையும் வெளியிட்டிருக்கவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

ஆனால் சமகால சம்பவங்களை தொடர்புபடுத்தி இலங்கையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அடக்கு முறைகள் வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியிருக்கிறது.

சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மீதான அழுத்தங்கள் உக்கிரமடைந்திருப்பதாக கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் ஜேன் பாஸ்கீ சொந்த நாட்டின் பிரஜைகளை இலங்கை தண்டிப்பதாக குறிப்பிட்டு கவலையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதனிடையே வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்குமிடையேயான நிண்டகால பகையை கவனத்திலெடுத்து இலங்கை விவகாரத்தில் தென்கொரியாவை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை முயற்சி மேற்கொண்டுள்ளார். தென்கொரிய வெளிவிவகார அமைச்சருடன் இடம்பெற்ற ஒரு சந்திப்பில் இலங்கை அரசாங்கத்தை வடகொரியாவுடன் ஒப்பிட்டு நவநீதம்பிள்ளை கருத்து வெளியிட்டிருப்பதை நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நகர்வு என ஜெனிவா வட்டாரங்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

இலங்கை மீதான வெளியுலகத்தின் முன்னெடுப்புகள் இவ்வாறிருக்க, போர்க்காலத்துடன் ஒப்பிட்டு போருக்குப் பிந்திய காலம் மேலும் ஆபத்தானதாக தென்படுவதாக யாழ். திருமறைக்கலா மன்றத்தின் கலைக்கோட்டத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதி ஜெய்சங்கர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

எமது பிரச்சினைகளுக்கு எங்களிடமுள்ள காரணங்கள் பற்றி நாம் சிந்திப்பதற்குப் பதிலாக, சர்வதேசம் என்பதன் பெயரால் முகவரி இல்லாத ஒன்றைப்பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம் என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

உண்மையில் நடக்கப் போவது என்ன என்பதற்கப்பால் யதார்த்தத்துக்குப் புறம்பான கற்பனைகளை எமது அரசியலுக்கு வசதியாக வளர்த்துக் கொண்டு அதனை எமது மக்கள் நம்பவும் அதற்காகத் தொடர்காத்திருப்பிலும் வைத்து ஏமாளிகளாக்குகிறோம்.

எம்முன்னால் இருக்கும் வெளியுலகத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரல் இந்த அளவுக்கு போலியானதாக இருக்கும் போது எமது மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களுக்கான தீர்வென்பதும் அவ்வாறே ஏமாற்றாய்த் தான் ஆகுமா என்பதைக் கேட்காமலிருக்க முடியவில்லை.

# குண்டாக இருப்பதும்... கறுப்பாக இருப்பதும்...

– தமிழ் ஸ்டுடியோ அருண் –

விஜய் தொலைக்காட்சியில், ஒல்லி பெல்லி என்கிற புதிய நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது. இது கண்டிக்கப்பட வேண்டியதாகத் தெரிகிறது. குண்டாக இருப்பதில் பல பிரச்சினைகள் இருக்கிறது, நிறைய நோய்கள் வர வாய்ப்பிருக்கிறது, எனவே மனிதர்கள் தங்களுடைய எடையை கட்டுக்குள் வைத்திருப்பது அவசியம்தான். ஆனால் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாவதைப் பார்த்தால், இந்த நாட்டில் ப்ரைவசி என்கிற ஒன்று இல்லவே இல்லையா என்கிற கேள்விதான் எழுகிறது.

குண்டாக இருப்பவர்களை ஒல்லியாக மாற்றும் அற்புத நிகழ்ச்சி என்று விளம்பரப்படுத்திக் கொண்டு, குண்டாக இருப்பது அவமானம் என்றும், குண்டாக இருப்பவர்களை கேலிக்குள்ளாக்குவதும் எந்த வகையில் நியாயமான செயல். இன்னும் சில. நாட்கள் கழித்து, கறுப்பாக இருப்பவர்களை, வெள்ளையாக மாற்றுகிறோம் என்று ஏதாவது ஒரு நிகழ்ச்சியை தொடங்கினாலும் தொடங்கிவிடுவார்கள். கறுப்பாக இருப்பதே அவமானம் என்கிற வகையில் ஏதாவது உருக்கமான சில காட்சிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்பி, இந்த நாடு முழுவதும், வெள்ளையாக மாற வேண்டியதன் அவசியத்தை உணர்த்த கிளம்பிவிடுவார்கள் போல.

ஏற்கனவே கறுப்பு என்கிற வார்த்தையை எத்தனை கேவலப்படுத்த முடியுமோ, அத்தனை தூரம் நாம் கேவலப்படுத்தி வைத்திருக்கிறோம். மோசமான முறையில், கணக்கில் வராமல் சம்பாதித்த பணத்திற்கு கறுப்பு பணம் என்று எந்த முட்டாள் பெயர் வைத்தது, ஏன் வேறு வண்ணங்களை இதற்கு பயன்படுத்தக் கூடாது? கரம்போர்ட் விளையாட்டில், கறுப்பு காய்க்குத்தான் குறைந்த மதிப்பு. செஸ் விளையாட்டில் வெள்ளைக் காய்களுக்குத்தான் முதல் மரியாதை.

இதை விட கொடுமை, நமக்கு பிடிக்காத சம்பவங்கள் நடக்கும் நாளுக்கு கறுப்பு தினம் என்று வேறு பெயர் வைத்துக்கொள்கிறார்கள். பிடிக்காத செயல் அல்லது சம்பவங்கள் நடந்தால் அதை எதிர்க்க கறுப்புக் கொடி குத்திக்கொள்வதும், உலகம் முழுக்க கறுப்பு நிறத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட வெறுப்பையே காட்டுகிறது.




ஏன் இதற்கெல்லாம் வெள்ளை நிறத்தை பயன்படுத்தக் கூடாது? இப்படி தொடர்ச்சியாகவே வெள்ளைக்காரர்களால் கறுப்பு என்கிற வண்ணமே அவமானப்படுத்தப்பட்டு வருகிறது.

கறுப்பாக இருப்பதே ஏதோ ஒரு வகையில் சாபம்தான், என்று நினைக்கும் அளவிற்கு தொடர்ச்சியாக தொலைக்காட்சிகளில் வரும் அழகு சாதன விளம்பரங்கள் நமக்கு உணர்த்திக்கொண்டிருக்கிறது. நாம் இருப்பது போன்ற வெப்பப் பிரதேசத்தில் கறுப்பாக பிறந்தவர்கள்தான் பாக்கியவான்கள், கறுப்புதான் இங்கே தேவை. வெள்ளைத்தோல் ஒருபோதும் இந்தப் பிரதேசத்தில் வெப்பத்தை ஏற்றுக்கொள்ளாது.


ஆனால், நமது ஊடகங்களும், கல்வி முறையும் ஆங்கிலேயர்களின் அடிமைத்தனத்தையே நமக்கு இன்னமும் போதித்துக்கொண்டிருக்கின்றன. அதன் உச்சம்தான், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் வரும் நிகழ்ச்சிகள். குண்டாக இருப்பவர்களுக்கு ஏற்கனவே இந்த சமூகத்தில் அத்தனை அவமரியாதை நடந்துகொண்டிருக்கிறது, இந்தச் சூழலில் அவர்களை கமரா வெளிச்சத்திற்கு கொண்டு வந்து, குண்டாக இருப்பதின் கொடுமையை அவர்கள் வார்த்தைகளை கொண்டே கேட்டு, அவர்களின் கண்ணீரை காசாக்க துடிப்பதை கண்டிக்கவேண்டும்.

# வியாபார மூளை!

இப்போது தொலைக்காட்சிகளில், அன்றாட நிகழ்ச்சிகளை, செய்தியுடன் உடனுக்குடன் காட்டுகின்றனர். செய்திகளுக்கு என்றே, "நியூஸ் சனல்"களும் வந்துவிட்டன. இதற்கு முன்னர் செய்திப்படங்களை, சினிமா தியேட்டர்களில்தான் படம் திரையிடப்படுவதற்கு முன்னால் காட்டிக்கொண்டிருந்தார்கள். ஜெர்மனியில் ஹிட்லரும், இத்தாலியில் முசோலினியும், அமெரிக்காவில் ரூஸ்வெல்ட்டும் தங்களைப் பற்றி அவ்வப்போது செய்திப்படம் எடுத்து, தியேட்டர்களில் வெளியிட்டுக் கொண்டே இருந்தனராம்...

சினிமாப் படத்துக்கு முன் காட்டப்படும் இந்த செய்திப் படங்களை, "நியூஸ் ரீல்" என்று, சொல்வர். இரண்டாம் உலகப் போர் நடந்த போது, தங்கள் நாட்டு வெற்றிச் செய்திகளை, அது, உண்மையோ பொய்யோ, மக்களிடம் காட்டி அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக, போர் சம்பவங்களைப் படம் பிடித்து வெளியிட்டனர்.

இன்றைக்கு ஹொலிவுட் சினிமா படங்களைத் தயாரிக்கும் புகழ்பெற்ற பராமவுன்ட், யுனிவேர்சல் படக்கம்பெனிகள் எல்லாம், ஒரு காலத்தில், அமெரிக்காவில் செய்திப் படங்கள் எடுத்துத் தான் புகழ் பெற்றவை. அதிலே அவர்களுக்குள் பலத்த போட்டி வேறு! ஒரு முறை, ஒரு அமெரிக்கத் தலைவர் பதவியேற்கும் நிகழ்ச்சி, தலைநகர்



# உடல்நிறை குறைப்பு ஒரு இலகுவான கலை

3

சி. சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்.
[நன்றி: Jaffna Diabetic Centre]

உடல்நிறையை குறைத்துக்கொள்வது மட்டும் எமது இலக்காக இல்லாது எமது உடலின் ஆரோக்கியத்தையும் தொழிற்பாட்டு வீதத்தையும் அழகையும் மேம்படுத்தி உடல்நிறையை குறைத்துக்கொள்வது எவ்வாறு என்று சிந்திக்க வேண்டும். இதற்கு ஊட்டச்சத்துள்ள உணவு-களும் உடற்பயிற்சியும் இன்றியமையாதவையாக அமைகின்றன.

உடல்நிறையை குறைப்பதற்கு எந்த வகையான உணவுவகைகளை தெரிவுசெய்ய வேண்டும் என்று சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்துவதாக இருந்தால் "அந்த உணவுவகைகள் உடல்நிறை அதிகரிப்பை ஏற்படுத்தாத கலோரிப் பெறுமானம் குறைந்த ஊட்டச்சத்துக்கள் நிறைந்த சுவையான, பசியை போக்கி திருப்தியை கொடுக்கவல்ல உணவு வகைகளாக இருக்க வேண்டும" என வரையறுக்கலாம். இந்த வகையான உணவுவகை களை தெரிவு செய்தால் மாத்திரமே எமது நிறைகுறைப்பு முயற்சியை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும் முன்னெடுக்க முடியும்.

பசிகிடந்து, பட்டினி கிடந்து துக்கப்பட்டு, துயரப்பட்டு, கஷ்டப்பட்டு, கவலைப்பட்டு, வெட்கப் பட்டு, வேதனைப்பட்டு செய்யும் நிறைகுறைப்பு ஆரோக்கியத்திற்கு வழிவகுக்காது. இதற்கு மாறாக ஒட்டகங்கள் போல ஒரேயடியாக உண்டு எதிர்காலத் திற்கு தேவையான உணவையும் உடலிலே [illegible]த்துவைக்க முயன்றால் அதுவும் உடல்நலத்திற்கு நல்லதல்ல.

சரியான உணவுவகைகளை தெரிவுசெய்து உண்ணுவோமாயின் உடலின் வினைத்திறன் அதிகரிப்பதுடன் உடற்பயிற்சி செய்யவேண்டும் என்ற ஊக்கமும் பிறக்கும்.

சில சமயம் உடல்நிறை அதிகரிப்பு சில நோய்களின் அறிகுறியாகவோ அல்லது சிலவகை மருந்துகளின் பாவனை காரணமாகவோ இருக்கலாம். அதிகரித்த உடல்நிறை காரண-மாக சிலருக்கு சில நோய்கள் ஏற்பட்டிருக்கலாம். அவை கண்டறியப்பட வேண்டும். ஆனால் அனேகமானவர்களில் தவறான உணவுப் பழக்கங்களும் போதிய பயிற்சி இன்மையுமே இந்தப் பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றன.



"No, it's not water. You seem to be retaining food."

உடல்நிறை குறைப்பு நடைமுறைப்படுத்துவதற்கு தடைக்கல்லாக ஒரு விடயம் பொதுவாக நிறைகூடிய அனைவரிலுமே காணப்படும். அந்த தடைக்கல் அடையாளம் காணப்பட்டு அப்புறப்படுத்தப்பட வேண்டும். இதுவே நிறைகுறைப்பு நடவடிக்கையின் முதலாவது படிநிலை. இந்தத் தடைக்கல் அகற்றப்பட்டால் மட்டுமே நிறை குறைப்பை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி அளவான உடல் நிறையை தொடர்ந்து பேணமுடியும்.

அது என்ன தடைக்கல்? அதை எவ்வாறு அடையாளப்படுத்தி அகற்றுவது?

"நான் உணவு விடயத்திலே கவனமான ஒருவர். உண்ணும் அளவு எவ்வளவோ குறைவு, சில வேளைகளில் உண்ணுவதே இல்லை, பல உணவு வகைகளைத் தவிர்த்துவிட்டேன். நிறை ஏன் அதிகரித்து வருகின்றது. என்பது ஒரு புரியாத புதிராக இருக்கிறது" என்று எண்ணிக்கொள்ளும் ஒரு ஆழமான மன உணர்வே அந்தத் தடைக்கல் ஆகும்.

"உணவு விடயத்தில் எங்கோ தவறு நடக்கிறது. இதுவே நிறை அதிகரிப்பிற்கு அடிப்படை. அதனை நிவர்த்தி செய்ய வேண்டும்" என்ற விடயத்தை அவர்களது மனது ஏற்றுக்கொள்ள மறுக்கும். நிறை அதிகரிப்பிற்கு வேறு ஒரு விடயம் தான் காரணம் என நிறுவ மனம் எத்தனிக்கும்.

இந்தத் தடைக்கல்லை தகர்த்து எறிவதற்கு உணவு வகைகளின் கலோரிப் பெறுமானங்கள் பற்றிய அறிவும் எமது உடலின் கலோரி தேவைகள் பற்றிய அறிவும் பேருதவியாக அமையும்.

(தொடரும்)

# நீலக்குயிலும் இசைராஜனும்

– ராகவன் சாமுவேல் –

இமைகள் திறக்க மறுக்கும் காலையில், மெலிதான உறக்கத்தில் அசங்கும் குழந்தையின் கையாய் தொட்டது அந்தப் பாடல். சின்ன ஸ்வர வரிசையில் ஆரம்பித்த அந்தப் பாடலின் முனைகளில் கட்டியிருந்த மயிலிறகுகள் வீசிய கவரியில் குளிர்ந்த காற்று விலக்கியது நித்"திரையை"!. "மகுடி" படத்தில் வரும் "நீலக்குயிலே" பாடலில் கேட்கும் குரல்களின் வசீகரம், சுகமான மலைச்சாரலில் நகரும் பேருந்தின் ஜன்னல் பயணமாய் மெட்டின் மிதமான வேகம், குளிர் நேர வெந்நீர் குளியலாய் இறங்கியது மனசை வழுக்கிக் கொண்டு.

வாழ்வதற்கான அர்த்தங்கள் எத்தனையோ இருக்கிறது அதில். மகோன்னதமான ஒரு விஷயம், இசையறிதல் அல்லது இளையராஜா அறிதல்.

திருவிழாக்காலங்களில், கல்யாணத்தில், காதுகுத்தில் என்று எல்லா விசேஷ காலங்களுக்கும், எழுபதின் இறுதியில் கேட்ட "கேட்டேளா அங்கே அதை..." என்று சிவக்குமாரின் வசனத்துடன் ஆரம்பாகும் பாடல், சுழலும் தட்டில் வெள்ளி விளிம்பென வந்து முகம் காட்டும் "கண்ணன் ஒரு கைக்குழந்தை" போல் முத்துக்கள் எத்தனையோ.

ஒரு முறை ஒரு வார இதழில் இளையராஜாவிற்குப் பிடித்த பத்துப் பாடல்களை பட்டியலிடச் சொன்னார்கள். அதில் அவரும் பத்து பாடல்களைச் சொல்லியிருந்தார். எனக்கு அந்த பத்தும் ஞாபகம் இல்லை இப்போது? இதை அவரே "இது இப்போதைக்கு ஞாபகம் இருப்பது நாளை கேட்டால் வேறு சொல்லலாம்" என்று கூறியிருந்தார்.

நாம் பாடலின் தொழில்நுட்பம் குறித்தோ, அல்லது இந்தப் பாடல் அமைந்த இராகம், சிக்கலான ஸ்வரக்கட்டுமானம் குறித்தோ பேசப்போவதில்லை. ஒரு சாமான்யனின் இசை இரசனை அல்லது இசையை அறிந்து கொள்ள முயல்பவனின் முனைப்பு மட்டுமே இங்கு பிரதானம். பெயரறியா பறவைகளின் பாடல்கள் மனதை நனைக்கும்போது அதைப் பகுத்தறியாது அந்த நொடி நேர மயக்கம் பற்றி மட்டுமே தங்கிவிடும்.

"கபகரிசா..." என்று ஆரம்பமாகும் அந்தப் பாடலின் வார்த்தைப் பிரயோகங்களோ அல்லது அதன் பொருட்செறிவோ அத்தனை சிறப்பில்லை என்றாலும், எஸ்.பி.பி. மற்றும் ஜானகியின் குரல்களில் இருக்கும் வசீகரம் முக்கியமானது. இதன் விசேஷமே... இளையராஜாவின் மெட்டும், அதில் இருக்கும் சின்ன சந்தங்களும், குழலிசையும், வீணை ஒழுகி நிரப்பும் இசையும் தான். இந்தப் பாடலின் அழகே, சிறப்பே அதன் எளிமையும், பாடல் முழுக்க பயணிக்கும் கர்நாடக இசை பாணியும் தான்.

மலையமாருதம், ரீதி கௌளை என்று பலவாறு ராகம் பற்றி ஆராய்ச்சி செய்பவர்கள் பேசிக்கொள்ளட்டும். நமக்கென்ன! இந்தப் பாடலைக் கேட்டு ரசிக்கும் புத்தி போதும். ஒரு ஆழமான பசும் பள்ளத்தாக்கு, அல்லது "ஹோ" என்று கொட்டுகிற அருவியைப் பார்க்கும் போது, "ஆ" என்று ஒரு உணர்வு வருமே அது போதும் நமக்கு. அந்த நொடி வாழ்க்கை போதும் எதையும் கொண்டாட...

"நீலக்குயிலே உன்னோடு தான்" என்று தொடங்கும் அந்தப் பாடலை எங்கு கேட்டாலும் நின்று விடத் தோன்றுகிறது. இதன் மேல் உள்ள ஈர்ப்பிற்கு முழுக் காரணமும் இளைய ராஜாவாகத் தான் இருக்க முடியும். குரலிசை தேர்வும், மெட்டும், வாத்தியக்கலவையும் உன்னதமாய் இருப்பதற்கு "நானன்றி யார் வருவார்" என்று வந்து நிற்பது ராஜா தான்.

மிகச்சிறந்த பெண் குரலிசை பாடல்கள் இளையராஜாவின் இசையில் இருந்து வந்தவைதான் என்று சத்தியம் செய்யமுடியும் எல்லோராலும். பழைய சுசீலாவின் பாடல்கள், ஜிக்கி, ஜமுனா ராணி, லீலா, ராஜேஸ்வரி என்று பெரிய பாடகர்கள் இருந்தும் மிகச்சிறந்த பாடல்கள் எழுபதுகளின் ஆரம்பத்திலும், எண்பதுகளின் முன் பாதியிலும்தான் இருந்தது என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

ஜானகி, உமா ரமணன், சுசீலா, சசிரேகா, ஜென்சி என்று வித்தை காட்டிய மாயக்காரன் இளையராஜா. "நிழல்கள்" படத்துக்காக இசைக்கப் பட்ட "தூரத்தில் நான் கண்ட உன் முகம்" என்ற படத்தில் இடம்பெறாத இந்தப் பாடல், படமாக்க வேண்டிய சிக்கலினால் கூட கை விடப்பட்டிருக்கலாம். பாலுமகேந்திரா, மகேந்திரன் வரிசையில் இன்னுமொருவர் வேண்டும் ராஜாவின் பாடலைப் படமாக்கும் விதம் பற்றி பேச!



வொஷிங்டனில் நடந்தது. செய்திப் படங்களின் தலைமை நிலையங்கள் எல்லாம் நியூயோர்க் நகரில் இருந்தன. வொஷிங்டனுக்கும், நியூயோர்க்குக்கும் இடையில், 450 கி.மீ., தூரம். காலையில் வொஷிங்டனில் நடைபெறுவதை, அ[illegible] மாலையே, நியூயோர்க்கில் சினிமாப் படமாக காட்ட, இரண்டு கம்பனிகளுக்குள்ளும் போட்டி; செலவைப் பற்றிக் கவலையில்லை.

ஒரு கம்பனி, படம் பிடித்ததும், சொந்த விமானத்தில் கொண்டு வர ஏற்பாடு செய்தது. மற்றொரு கம்பனி இயக்குனரின் மூளை வேகமாக வேலை செய்து, ஒரு தனி ரயிலையே அமர்த்தி விட்டார். விமானத்தை விடவா ரயில் வேகமானது என்று, நீங்கள் நினைக்கலாம். ஆனால், இவர், ஓடும் ரயிலிலேயே ஸ்டுடியோ அமைத்து விட்டார். லாப், எடிட்டிங் ரூம், சவுண்ட் றெக்கோர்டிங் என்று, எல்லாம். அதிலேயே அமைத்து விட்டார்.

குறிப்பிட்ட நாளில், வொஷிங்டனில் படம் பிடித்தனர். ஒருவருடையது, உள்ளூர் ஸ்டுடியோவுக்குச் சென்றது, மற்றொருவருடையது ரயிலுக்கு வந்தது. படத்தை உருவாக்க ஐந்து மணி நேரமாகும். ரயில், வொஷிங்டனிலிருந்து, நியூயோர்க் செல்ல ஐந்து மணி நேரம்தான். ரயில், நியூயோர்க்கை அடைந்த போது, படத்தின் முதல் பிரதி தயாராகிவிட்டது. இன்னொருவரின் படம் அதே நேரத்தில் தயாராகி, அப்போதுதான் விமானம் ஏறியது. விமானம் வந்துசேர ஒன்றரை மணி நேரமாகும். அதற்குள் ரயில் கம்பனியாரின் படம் திரையிடப்பட்டு, எல்லோரும் பார்த்தாகி விட்டது... இதைத்தான் வியாபார மூளை என்பது!




# புங்குடுதீவின் பூர்வீகமும் புனிதத்துவமும்

## அமைவிடம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமேற்கே அமைந்துள்ள சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவுக் கிராமம் நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு ஆகும். இத்தீவானது ஏனைய தீவுகளால் சூழப்பட்டுள்ளதுடன் 11.2 சதுர மைல் பரப்பளவினைக் கொண்டுள்ளது. பாய்க்கப்பலின் உருவத்தினைப் போன்ற நிலத்தோற்றத்தைக் கொண்டுள்ள இத்தீவானது யாழ்ப்பாண நகரத்திலிருந்து 15 மைல் தொலைவில் அமைந்துள்ளதுடன் வேலணைத்தீவிலிருந்து ஆழம் குறைந்த 3 மைல் கடற்பரப்பினால பிரிக்கப்பட்டுள்ளது.இத்தீவின் பிரதான நிலப்பரப்பு தவிர்ந்த ஊரதீவு, பல்லதீவு, கேரதீவு, போன்ற சிறு தீவுகள் மழைக்காலங்களில் நீரினால் பிரிக்கப்பட்டும் கோடை காலங்களில் இணைந்தும் காணப்படுகின்றது.1981ஆம் ஆண்டு குடித்தொகைக் கணிப்பீட்டின்படி 14 622 மக்கள் வாழ்ந்திருந்தனர். 1991ஆம் ஆண்டு 17000 மக்கள் வாழ்ந்துள்ளனர் என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

## பௌதீக வளம்

பௌதீக ரீதியாக புங்குடுதீவுக் கிராமத்தை நோக்கும் போது இத்தீவின் தென்கிழக்கே வீராமலைப்பகுதி உயரம் கூடிய பிரதேசமாகவும் வடமேற்கு நோக்கி படிப்படியாகத் தாழ்ந்து செல்வதைக் காணமுடிகின்றது.மாரி காலங்களில் வீராமலைப் பகுதி மற்றும் அதன் அயற் பகுதிகளிலிருந்தும் நீர் வழிந்தோடி கள்ளியாற்றுடன் சங்கமமாவதைக் காணமுடிகின்றது. இத்தீவின் தென்பகுதி உயரம் கூடியதாகவும் வடபகுதி தாழ்ந்ததாகவும் இருப்பதுடன் கேரதீவைச் சார்ந்த பகுதிகள் சதுப்பு நிலத்தை ஒத்த பண்புகளைக் கொண்டதாகவுள்ளன. பொதுவாக இத்தீவின் சராசரி வெப்பநிலை 802 பரணைற்றாகவும் வருடாந்த மழைவீழ்ச்சி 503இற்கும் குறைவாக இருப்பதனாலும் வளம் குறைந்த நரைமண் தொகுதியே பெரும்பாலான பகுதிகளில் சிப்பி கலந்த மண்,களிமண், ஊரிகலந்த மண்,கொழுக்கிக்கல் கலந்த மண் என்பன காணப்படுகின்றன.இத்தீவின் நீர் வளத்தினைப் பொறுத்தவரை 68.0 சதவீதமான கிணறுகளில் உவர்த்தன்மை கொண்ட நீரே காணப்படுகின்றன என அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.நன்னீர் வளம் ஆங்காங்கே தொட்டந்தொட்டமாக காணப்படுகின்றது.இதனால் மக்களது அன்றாட வாழ்வுப் பிரச்சினையில் நீர்வளப்பயன்பாட்டுத் தன்மை முக்கியமான இடத்தினைப் பிடித்துள்ளது.

## வரலாற்று நோக்கு


புங்குடுதீவுக் கிராமத்தின் வரலாறு தீவகத்தின் வரலாற்றுடன் மட்டுமல்லாது யாழ்ப்பாணக்குடாநாட்டுடனும் தென்னிந்தியாவுடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது.வளவாய்ப்புகளைக் கொண்ட யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான மக்கள் போக்குவரத்தில் தீவுப்பகுதி உட்பட புங்குடுதீவு முகசிய இடத்தில் அமைந்துள்ளமை தென்னிந்திய மக்களின் உள்வரவுக்கு உதவியிருக்கலாம்.குறிப்பாக காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள பௌதீக மற்றும் அரசியல் மாற்றங்களால் மக்கள் இப்பகுதிகளில் வந்து வாழ்ந்திருக்க நியாயம் உண்டு.அதாவது தென்னிந்தியாவிலிருந்து வந்துள்ள மக்களின் வழித்தோன்றல்கள் பற்றி காலத்திற்குக் காலம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.இது மட்டுமல்லாது இத்தீவு உட்பட ஏனைய தீவுகள் சர்வதேச வர்த்தக மையமாக இருந்துள்ளமைக்கு பல்வேறு சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. உதாரணமாக புங்குடுதீவு புளியடித்துறை என்று தற்போது பயன்படுத்தப்படாத துறைமுகத்திற்கு அருகாமையில் பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன.இம்மரங்கள் அராபியரால் அறிமுகப்படுத்தப்பட்டன என்பர். எனவே அராபியர் இத்தீவுக்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். வல்லிபுரத்தில் கண்டு எடுக்கப்பட்ட சாசனத்தில் பியாங்கு தீபம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. தற்போதைய புங்குடுதீவே முன்னர் பியாங்கு என அழைக்கப் பட்டுள்ளது என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.பியாங்குச் செடிகள் அதிகமாக காணப்பட்டிருந்தமையால் பியாங்குதீபம் என அழைக்கப்பட்டிருந்த இத்தீவு காலப்போக்கில் பியாங்குதீவு எனவும் பின்னர் புங்குடுதீவு எனவும் மருவியதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டு மக்களின் தொடர்பு காணப்பட்டிருந்தமையால் அங்குள்ள புங்கநூர்ங்குடி என்ற இடப்பெயர்வு இத்தீவுக்கு அவர்களால் சூட்டப்பட்டிருக்கலாம்.இஸ்லாமியர்களது படையெடுப்புக் காலத்தில் அவர்களது கொடுமையிலிருந்து தப்பி தமது கன்னிப் பெண்களை பாதுகாக்கும்நோக்குடன் இத்தீவில் வந்து குடியேறினர் எனவும் அவர்களால் இடப்பட்ட 'ங்குடி' என்ற பெயர் காலப்போக்கில் மருவி புங்குடுதீவு என வழக்கில் வந்துள்ளது என கொள்பவர்களும் உளர்.வேறுசிலர் புங்கமரம் நிறைந்து காணப்பட்டமையால் புங்கு - உடு - தீவு என பிரித்து புங்கமரம் நிறைந்த தீவு எனப் பொருள் கொள்கின்றனர். தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றமையால் புங்குடுதீவில் சோழனோடை, சோழம்புலம்,பல்லதீவு போன்ற இடப்பெயர்கள் அவர்களால் இடப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் குறிப்பாக போர்த்துக்கீசர் இத்தீவுக்கு கொங்கரடிவா எனவும் ஒல்லாந்தர் மிடில்பேக் எனவும் பெயரிட்டு அழைத்துள்ளனர்.தீவுகளின் மத்தியில் அமைந்துள்ளமையால் மிடில்பேர்க் என பெயர்வைத்துள்ளனர் என்றே கொள்ள வேண்டும்.

## அம்பலவாணர் தாம்போதி


புங்குடுதீவையும் வேலணை தீவையும் இணைக்கும் அம்பலவாணர் தாம்போதி புங்குடுதீவையும் வேலணை தீவையும் இணைக்கும் அம்பலவாணர் தாம்போதி வாணர் சகோதரர்களின் அரிய முயற்சியின் பலனாக இன்றும் தலை நிமிர்ந்து நிற்கிறது.

### புங்குடுதீவு சண்முகநாதன் கனிஷ்ட வித்தியாலயம்



புங்குடுதீவு கிழக்கு பகுதியில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை வல்லன் மாவுதிடல்பகுதி மக்களின் ஏகோபித்த கல்விச் சொத்து. போக்குவரத்து வசதி குறைந்த இந்தப் பாடசாலைக்கு வந்து ஆசிரியப் பணி செய்தவர்கள் போற்றப்பட வேண்டிய தெய்வங்கள் . இந்தப் பகுதி பெரியவரும் சைவத் தொண்டருமான மார்க்கண்டு சோதிநாதர் தனது சொந்த காணியில் இந்தப் பாடசாலையை 1925 இல் ஆரம்பித்தார். தொடர்ந்து சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்டது. 1970 இல் பெற்றோர், கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு இடப் பற்றாகுறையைப் போக்கும் முகமாக புதிய கட்டிடம் ஒன்றை கோரி இருந்தனர் .அதற்கிணங்க புதிய கட்டடம் ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டது.

### கண்ணகை அம்மன் தேர்த்திருவிழா







### புங்குடுதீவு மகாவித்தியாலயம்







### புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்



புங்குடுதீவு கமலாம்பிகை மகா வித்தியாலய புதிய நுழைவாயில் சுவிஸ் வர்த்தகர் சாயி ட்ரடெர்ஸ் ரவி குடும்பத்தினால் அமைத்துக் கொடுக்கபட்டது புங்குடுதீவு மடத்துவெளி கமலாமபிகை கனிஸ்ட மகாவித்தியாலய முன் பகுதி மதிலுடன் கூடிய நுழைவாயில் அழகான முறையில் புதிதாக அமைக்கப்பட்டு கொடுககப்பட்டுள்ளது.இந்த அரிய பணியை சுவிசில் வசிக்கும் இராசமாணிக்கம் குடும்பத்தினரால் (சாயி ரெடேர்ஸ்) முழுமையாக செய்து கொடுக்கப்பட்டது பாராட்டத்தக்கது.இதற்கான நிதி புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத் தலைவர் இராசமாணிக்கம் ரவீந்திரன் மற்றும் அவரது சகோதரர்களினால் வழங்கப்பட்டுள்ளது.

### வாணர் பாலம்

இலங்கையில் மிகநீளமான பாலம்





மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தினர் புதிய தொலைக்காட்சிப் பெட்டியொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இதில் நிலையத்தின் தலைவர். இ.மனோகரன் வைத்தியசாலை பொறுப்பதிகாரி ஆ.காந்தநேசனிடம் தொலைக்காட்சிப் பெட்டியை கையளிப்பதைக் காணலாம். (109)

# யாழ்.விஞ்ஞான சங்கத்தால் ஏப்ரலில் 3 நாள் அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் "சூழல் பாதுகாப்பிற்கான புதிய வழிகளை கண்டுபிடித்தல்" என்னும் கருப்பொருளில் வருடாந்த அமர்வு எதிர்வரும் 2,3 மற்றும் 4ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் அமைந்துள்ள உயிரியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்படி 2ஆம் திகதி முதலாம் நாள் நிகழ்வு காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞானசங்கத்தின் தலைவி திருமதி. ச.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியத்தின் தங்கப்பதக்க விருது, கொழும்புப்பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியை கிரிஸ்ரினி அரியராணி ஞானதாசனுக்கு வழங்கப்படவிருக்கிறது. அதனைத் தொடர்ந்து சிறப்பு விரிவுரைகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


தொடர்ந்து 3ஆம் திகதி இரண்டாம்நாள் நிகழ்வு காலை 9.00 மணிக்கு பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் "சூழல் பாதுகாப்பிற்கான புதிய வழிகளைக் கண்டுபிடித்தல்" எனும் கருப்பொருளுக்கு அமைவாக கருத்துரைகள் விரிவுரையாளர்களாலும் புலமையாளர்களாலும் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து ஆய்வுக்கட்டுரைகளின் சமர்ப்பிப்புக்கள் இடம்பெறும்.

தொடர்ந்து 4ஆம் திகதி மூன்றாம் நாள் நிகழ்வு காலை 9.00 மணியளவில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறும் மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2.00 மணியளவில் திருமதி. ச.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறுவதோடு அன்றைய தினம் பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட போட்டிகளுக்குரிய பரிசில் வழங்கலும் இடம் பெறவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி பா. நிமலதாஸன் அறிவித்துள்ளார்.

# ஆண்டு நிறைவு விழா

இணுவில் பொது நூலகத்தின் கனடா அமைப்புக்குழுவின் அனுசரணையில் இணுவில் சன சமூக நிலைய பொதுநூலகத்தின் 12ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நூலகத்தின் தலைவர் சொ.ஹரிசங்கர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு வடமாகாண முதலமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இதன்போது புதிய நீர்த்தாங்கி திரை நீக்கம் செய்யப்பட்டு அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது. (48)

## வெள்ளி நற்சிந்தனை...



# படியுங்கள் நல்லனவற்றைத் தெரிந்து படியுங்கள்

இரண்டு பேர் நண்பர்களாக இருக்கும் போது, எவ்வளவோ இரசகியங்களைத் தங்களுக்குள்ளாகப் பகிர்ந்து கொள்கிறார்கள் துரதிஸ்டவசமாக அவர்கள் ஒருவரை ஒருவர் பிரிய நேரிட்டால், அந்த இரகசியங்களைப் பிறரிடம் வெளியிடுவது சரியாக இருக்குமா?

செல்வம் பெறுவதற்காகவோ, அதிகாரத்தில் இருப்பதற்காகவோ, அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவோ அவர்கள் சில தவறுகளைச் செய்திருக்கக்கூடும். பிரிவு நிகழும் போது அவற்றை அவர்கள் வெளியில் பேசிக கொள்வதும், ஒருவருக்கெதிராக இன்னொருவர் அதைப் பயன்படுத்திக் கொள்வதும் முறையாகாது. அப்படிப்பட்ட காரியத்தைப் பாவச் செயல் என்றே கருத வேண்டும்.

உணவில் கலப்படம் செய்வதை மிகப் பெரிய பாவமாக நம்முடைய சாத்திரங்கள் கருதுகின்றன. பெற்றோர்களைப் புறக்கணிப்பதும் அது போலத்தான்.

பெற்றோர்களைப் பட்டினி போட்டுவிட்டு, கடவுளுக்குப் படையல் போட்டுக் கொண்டிருப்பவன் பக்தன் ஆக மாட்டான். கடவுளுக்கு உணவை நைவேத்தியம் செய்வதை விட, பசித்திருக்கும் பெற்றோரைப் புசிக்கச் செய்வதுதான் சிறந்த செயல் என்று நம்முடைய வேதங்கள் சொல்லுகின்றன. இராமாயணத்தில் "பரதனின் சபதம்" இதுபோன்ற பல உண்மைகளை எடுத்துச் சொல்லுகிறது.

இராமனைக் காட்டுக்கு அனுப்பியகைகேயியின் செயலுக்கு பரதன் உடந்தையாக இருக்கவில்லை. அந்தக் காரியத்தில் தனக்கும் பங்கிருக்கிறது என்று நிரூபித்தால், நூற்றி எழுபது குற்றங்களைச் சொல்லி, அந்தக் குற்றங்களுக்கு எல்லாம் என்ன தண்டனையோ, அந்தத் தண்டனையைத் தான் அனுபவிக்கத் தயாராக இருப்பதாகப் பரதன் கூறுகிறான்.

இராமனுக்கும் பரதனுக்கும் நடைபெறும் உரையாடல் ஆட்சிக்கலை பற்றியும் , நல்லாட்சி நடைபெற என்னென்ன தேவை என்பதனையும் தெளிவுபடுத்துகின்றன. அமைச்சர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்க வேண்டும் பாதுகாப்பு விடயங்கள் இரகசியமாக வைக்கப்பட வேண்டும். என்பன போன்ற பல விடயங்கள் அதில் அடங்கியுள்ளன.

நமது இலக்கியங்கள் மனித வாழ்வுக்கு வழிகாட்டுபவையாகவே அமைந்துள்ளன. வெறும் கதை படிப்பதற்காக அவை எழுதப்படவில்லை. ஒவ்வொரு கதாபாத்திரமும் அவை ஒரு காட்சியில் மட்டும் வந்தாலும் கூட, அப்பாத்திரங்கள் ஒரு உண்மையை எடுத்துக்கூறுவதாகவே அமையும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

சுப்பிரமணியபுரம் முதல் குக்கூ வரை இளையராஜாவின் இசையின் தாக்கத்தைப் பல படங்களில் உணரமுடிகிறது. சில படங்களில் அதுவே ஒரு பாத்திரம் போலவும் மாறிவிடுகிறது. ராஜாவின் இசையை ரசித்து அனுபவித்த தலைமுறையால் உருவாக்கப்படும் படங்கள் இவை. ஆனால் சென்ற தலைமுறையின் ஆதர்சங்களான எம்.ஜி.ஆர், சிவாஜி இப்போது கேலிப்பொருளாகி விட்டனர். எல்லா ஆதர்சங்களும் ஏதாவது ஒருகாலத்தில் கேலிப்பொருளாகி விடுவது இயல்புதான், ஒருவேளை அடுத்த தலைமுறைக்கு, நமது ஆதர்சனமான இளையராஜா இசையும் கேலிப்பொருளாகுமோ என்னவோ! – சுகுணா திவாகர்

குக்கூ படத்தில் மிகப் பிடித்த விஷயமே... அழுது ஒப்பாரி வைக்கக் கூடிய எல்லா வாய்ப்புகளும் இருக்கக் கூடிய ஒரு திரைக்கதையை அப்படி காட்சிப்படுத்தாமல் மிக மிக பொஸிட்டிவாக சொல்லியிருப்பதே...

மாற்றுத் திறனாளிகள் பற்றிய எத்தனையோ சினிமாக்கள் தமிழில் இதற்கு முன்பும் வந்திருக்கின்றன. அந்த கதாபாத்திரங்கள் கழிவிரக்கமும், சுயபச்சாதாபமும் நிரம்பியவர்கள். கூடவே சுற்றியிருக்கும் சமூகம் அவர்களது ஊனத்தை தொடர்ந்து கேலி செய்தபடி, காயப்படுத்தியபடியே இருக்கும்...

குக்கூ வில் அப்படியான ஒரு காட்சி கூட இல்லை. பார்வையற்றவர்களாய் இருப்பது பற்றி கதாபாத்திரங்களுக்கு யாதொரு புகாரும் இல்லை. தன்னம்பிக்கையோடு சராசரி வாழ்க்கையின் வலிகளை எதிர்கொள்கிறார்கள். அவர்களது குடும்பம், நண்பர்கள் இந்த சமூகம் என எவரும் அவர்களை தூக்கிப் போட்டு மிதிக்கவில்லை. ஏமாற்றவில்லை. கேலி செய்யவில்லை. நரநரவென சுவரில் பிடித்து முகத்தை உரசவில்லை.


வாழ்க்கையின் சிக்கல்கள் எல்லோருக்கும் தான் இருக்கின்றது. அதை எப்படி நம்பிக்கையோடு வாழ்வது என்பதைதான் எழுத்தோ, சினிமாவோ சொல்லித்தர வேணடும். வாழ்க்கையின் உன்னதமான தருணங்களை, உறவுகளின் மேன்மையை சொல்லித்தந்து நம்மை மேம்படுத்து வதுதான் கலையின் வேலையாக இருக்க முடியும். அப்படியான ஒரு விஷயத்தைத் தான் குக்கூ நமக்கு சொல்லித்தருகிறது.

குறை சொல்ல உட்கார்ந்தால் இந்தப் படத்திலும் சொல்ல முடியும். அழுகைப் படமாக இல்லாமல் போனதாலேயே அதை செய்ய முடியவில்லை.. இந்தக் கதையை தமிழின் உன்னத இயக்குனர்களான பாலா, அமீர், வசந்தபாலன் போன்றவர்கள் எடுத்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என ஒரு நிமிடம் யோசித்துப் பார்க்கலாம்... தியேட்டரில் இருந்து நேராக போய் தற்கொலை செய்யலாமா என யோசித்திருப்போம்.. அல்லது துக்கம் தாங்காமல் தியேட்டர் இடிந்து விழுந்து விடுமோ என்கிற பயத்தோடு படம் பார்த்திருப்போம்... ஆனால் குக்கூவில் அப்படியான ஒரு வசனம் கூட இல்லை... – ப்ரியா தம்பி

நானெல்லாம் சலிக்காமல் வாரம் மூன்று திரைப்படங்கள் பார்த்த ஆள். படம் பார்த்தால் தலைப்பில் ஓடும் பெயர்கள் முதல் பாட்டுவரி வரை எல்லாம் மனப்பாடமாகுமளவு கருத்தொன்றிப் பார்ப்பவன். அவ்வப்போது பார்க்கும் பயங்கர அறுவைப் படமொன்று என்னைப் படம் பார்ப்பதையே வெறுக்க வைத்துவிடும். அதன்பின் திரையரங்குக்குச் சென்று படமே பார்க்காமல் வருடக்கணக்கில் இருந்துவிடுவேன். திரும்பவும் தற்செயலாய் நல்ல படம் ஏதாவதொன்றைப் பார்த்து மனவிழைவு மீட்டெடுக்கப்பட்டால் மட்டுமே படங்கள் பார்க்கத் தொடங்குவேன். பாடல் எழுதும் நண்பர்கள் சிலர் அவர்கள் பாட்டெழுதும் படங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதில்லை என்று சொன்னார்கள். நல்ல பழக்கம்! எஸ்.பி. பாலசுப்ரமணியம் தாம் பாடிய பாடல்கள் உள்ள படங்களைப் பார்த்ததே இல்லையாம். தெளிவாக இருக்கிறார்கள். தொண்ணூறுகளில் மசமசவென்று படங்கள் பார்த்துத் திரிந்த என்னை ஒருபடம் வாசல் கம்பியைப் பிடித்து உலுக்கி 'என்னை வெளியே விட்டுடுங்க' என்று கெஞ்ச வைத்தது. அந்தப் படம் ராம்கி நடித்த 'தினமும் என்னைக் கவனி.' அதன்பின் வருடக்கணக்கில் படமே பார்க்காமல் இருந்தேன். அடுத்த பத்தாண்டுகள் கழித்து 'குடைக்குள் மழை' என்று ஒருபடம். திரையரங்கில் இருந்த எல்லாருமே எழுந்து போய் படவோட்டியை (Operator) உதைக்கப் போய்விட்டோம். சென்ற வருடம் 'இரண்டாம் உலகம்' என்ற படம் பார்த்தேன். அதன்பின் இதுவரை எந்தப் படத்தையும் பார்க்க அரங்குக்குச் செல்லவில்லை. இந்த விரதம் வருடக் கணக்கில் தொடரும் என்றே தோன்றுகிறது! – மகுடேசுவரன்

# அநீதியான அரசியல் திட்டங்கள் தொடர்பில் தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது

## மகாநாயக்க தேரர்கள்



பல வருட சிறந்த வரலாற்றைக் கொண்ட நாடொன்றுக்கு எதிராக முன்வைக்கப்படும் இவ்வாறான அநீதியான அரசியல் திட்டங்கள் தொடர்பில தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது என மகாநாயக்க தேரர்கள் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் தலைவருக்கு மகஜர் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளனர்.

சமாதானத்தை உறுதிப்படுத்துவதை விடுத்து தற்போது அடைந்துகொண்டுள்ள சமாதானத்தை சீர்குலைக்கவே யுத்தக் குற்றங்கள் தொடர்பிலானவற்றை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை முன்வைப்பதாக மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றைக் கொண்டு வருவது இறைமைக்கு எதிரான செயற்பாடு என அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிவில் யுத்தங்களில் ஈடுபட்ட உலகின் ஏனைய நாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தாமல் இலங்கை தொடர்பில் மாத்திரம் பிரேரணையொன்றைக் கொண்டுவருவது ஓர் அரசியலாகவே இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் ஸ்திரமற்ற நிலை ஜெனிவாவில் ஏற்படுத்த முயற்சி

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தியாகத்தினால் பெற்ற வெற்றியின் மூலம் பாரிய அபிவிருத்தி இலக்குகளை முன்னெடுத்து வரும் இலங்கை தொடர்பில் காழ்ப்புணர்ச்சியுடன் செயற்படும் ஒரு சில மேற்கு நாடுகள் ஜெனிவா பிரேரணை மூலம் நாட்டில் ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன. சவால்களை துணிவுடன் எதிர்கொண்ட அரசாங்கம் தற்போது தாயகத்திற்கு எதிராக விடுக்கப்படும் சவால்களை எதிர்கொள்ளத் தயார் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது படையினரின் உயிர்த் தியாகம் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் துணிச்சலான தலைமைத்துவம் காரணமாக யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் நாட்டில் உருவாக்கப்பட்டது.

தற்போது பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனைப் பொறுக்க முடியாத சில வெளிநாடுகள் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி பிரேரணைகளை நிறைவேற்றி அபிவிருத்தித் திட்டங்களை ஸ்தம்பிக்கச் செய்வதற்கு முயற்சிக்கின்றன.

இதனை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இனங்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தவும் மத ரீதியிலான குழப்பங்களை உருவாக்கவும் சர்வதேச சக்திகள் முனையும் இவ்வேளை மக்கள் அனைவரும் அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# அந்நிய செலாவணியை ஈட்டும் வகையில் ஆகாய மார்க்க சுற்றுலா ஆரம்பம்

அதிகளவு அந்நிய செலாவணியை ஈட்டும் வகையில் கண்டியிலிருந்து புதிய சுற்றுலா அணுகு முறை ஒன்றை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

அதிவேக வீதி அபிவிருத்திகள் இல்லாத காரணத்தால் உள்ளூர் சுற்றுலா மையங்களுக்குச் செல்வதற்கு ஆகாய மார்க்க சுற்றுலா முறையொன்று வெளிநாட்டுச் சுற்றுலாத் துறையினருக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று கண்டி போகம்பறை மைதானத்திலிருந்து இது ஆரம்பமானது. இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் மூலம் சுற்றுலாப் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இன்றைய முதல்நாள் நிகழ்வில் 130 பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாத்துறையினர் அழைத்துச் செல்லப்பட்டனர். ஒரு ஹெலிகொப்டரில் 25 பேர் வீதம் செல்லக் கூடியதாக அமைந்துள்ளது. இது தொடர்பாக டெஸ்டினேசன் முகாமைத்துவக் கம்பனியின் தலைவர் சந்திரா விக்கிரமசிங்க பின்வருமாறு தெரிவித்தார். யுத்தம் காரணமாக எமது சுற்றுலாத்துறை பாரிய பின்னடைவைக் காட்டியது. யுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் ஒரு நாளைக்கு 100 டொலர்களிலும் அதிகமாகச் செலவிடும் சுற்றுலாப் பயணிகளைக் காண முடிந்தது.

ஆனால் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பாரியளவு சுற்றுலாத்துறையினர் வருகை தந்த போதும் அவர்கள் நாளாந்தம் 30 அல்லது 35 டொலர்கள் செலவிடுவோராகவே இருந்தனர்.

# சந்திரிகாவின் தவறான தீர்மானங்களாலேயே இராணுவத்தில் அதிகளவான உயிரிழப்புகள்

## குற்றம் சுமத்துகிறது ஹெல உறுமய



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தவறான தீர்மானங்களினால் இராணுவ வீரர்கள் பெருமளவானோர் உயிரிழக்க நேரிட்டதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

சந்திரிகாவின் தவறான யுத்த தீர்மானங்கள் காரணமாகவே ஏ 9 பாதையை மீட்கச் சென்ற எமது 12ஆயிரம் பிள்ளைகள் பலியானார்கள். சந்தி ரிக்காவின் ஜயசிக்குறு படை நடவடிக்கையின் போது 26 ஆயிரம் படையினர் பலியாகினர். அவர்களில் 24 ஆயிரம் பேர் சந்திரிகாவின் நிர்வாகத்திலேயே பலியானார்கள் என அவர் தெரிவித்தார்.

# உலக இளைஞர் மாநாடு 18 நாடுகளுக்கு தகவல்



(கொழும்பு)

இவ்வருடம் மே மாதத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள உலக இளைஞர் மாநாடு தொடர்பான தகவலை 40 நாட்களுக்குள் 18 நாடுகளில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு உத்தியோகபூர்வமாக எடுத்துச் செல்லும் முயற்சியை இலங்கை இளைஞர் சம்மேளனம் ஆரம்பித்துள்ளது.

சம்மேளனத்தின் பிரதம செயலாளர் சமன் குமார தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்று இதற்காக வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளது.

இக்குழுவினர் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தங்காலையில் உள்ள அவரது காால்டன் இல்லத்தில் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையின் புகழை உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறுங்கள் என்று வாழ்த்திய ஜனாதிபதி இலங்கையின் தேசிய கொடியை அக்குழுவினரிடம் கையளித்தார்.

உலக இளைஞர் சம்மேளனத்தின செயற்குழுவின் இணைத் தலைவர்களான அமைச் சர் டளஸ் அழகப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தென்,மேல் மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் தேர்தலில் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாக தேர்தெடுக்கப்பட்டுள்ள பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றிற்கு நேற்று முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொழும்பு மா்வட்டத்தில் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள கொழும்பு ரோயல் கல்லூரி, ஹிசிபத்தன கல்லூரி மற்றும் டீ.எஸ் சேனாநாயக்கா கல்லூரி என்பன நேற்று முதல் மூடப்பட்டுள்ளன. கம்பஹா மாவட்டத்திற்கான வாக்கெண்ணும் மத்திய நிலையமாக தெரிவு செய்யப்பட்டுள்ள வேயங்கொட பண்டாரநாயக்க மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இன்று முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கம்பாந்தோட்டை சுஜி தேசிய பாடசாலை, களுத்தறை திஸ்ஸ மத்திய கல்லூரி மற்றும் காலி சவுத்லண்ட் பாலிகா வித்தியாலயத்தியால்யமும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, சியனே கல்வியியற் கல்லூரி, ஹாபிட்டிகம தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் பயயோதுன் ரட்ட கல்வியியற் கல்லூரிகளும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் தென் மாகாணங்களிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் தேர்தல் காரணமாக இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

# மீனவர்களின் கோரிக்கை நிதி அமைச்சின் கவனத்திற்கு

## — அமைச்சர் ராஜித உறுதி —



சிறு படகு மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் மானியம் வழங்கப்பட வேண்டும் . என்ற கோரிக்கையை நிதி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரவுள்ளதா்க கடற்றொழில் அமைச்சர் ர்ஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி, நாட்டின் சில பகுதிகளில் நேற்றுமுன்தினம எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நீர்கொழும்பு, கல்பிட்டி, சிலாபம், முந்தல் உள்ளிட்ட பல பகுதிகளில் சிறு படகு மீனவர்கள் நேற்றுமுன்தினம் பணி பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

அத்தோடு குறித்த பகுதிகளில் மீன் விற்பனை நிலையங்களும் நேற்று முன்தினம் மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மீனவப் பிரதிநிதிகளுக்கும், கடற்றொழில் அமைச்சருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் பகல் நடைபெற்றது.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான முதலாம் தவணை பயிற்சிப் பரீட்சை -2014

## தமிழ் - சைவசமயம்

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "சுருள் அளகக் காட்டை மிதிக்கும் கயற்கண்ணி" இங்கு அளகம் என்பதன் பொருள்
1) மயில் 2) கூந்தல் 3) புற்று 4) தோடு

2) "குன்றகழாக்கித் தெவ்வர் நாட்டை மிதிக்கும்" என்ற தொடரில் தெவ்வர் என்பது
1) நண்பர் 2) பகைவர் 3) தோழர் 4) துணைவர்

3) "பாரதியின் பாடல்களைப் பாமரரும் படித்து இன்புறுகின்றனர்" இங்கு பாமரர் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
1) கவிஞர் 2) அரசர் 3) பண்டிதர் 4) மாந்தர்

4) "சிறியார் சிறுமையும் தோன்றாதாம்" என்ற தொடரில் சிறுமை என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1) பெருமை 2) பருமை 3) பொறுமை 4) கீழ்மை

5) "இன்றைய வாலிபர்கள் நாளைய தலைவர்கள்" இங்கு வாலிபன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
1) சிறுமி 2) வாலிபை 3) வாலை 4) கிழத்தி

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) வயலும் வயல் சார்ந்த இடம்
1) குறிஞ்சி 2) முல்லை 3) மருதம் 4) நெய்தல்

7) சபையிற் சொல்லத் தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுதல்
1) குழூக்குறி 2) மங்கலம்
3) இலக்கணப்போலி 4) இடக்கரடக்கல்

8) யானையின் இளமைப் பெயர்
1) பறள் 2) போதகம் 3) குருளை 4) அரி

9) உலை, உழை, உளை என்பன முறையே தரும் பொருள்
1) நீரலை, இடம், அழுகை 2) அளவு, குலை, தயிர்
3) சபை, தவிர், விளக்கு 4) கொடு, கெடு, சிறப்பு

10) செல்வம், இடம், விலங்கு எனப் பலபொருட்களைக் குறிக்கும் ஒரு சொல்
1) குதிரை 2) கரி 3) மாடு 4) அரி

11) "அந்த அறிஞர் வெளி உலகிற்கு தெரியாது இருந்தார்" என்பதற்கு பொருத்தமான உவமைத் தொடர்
1) கலங்கரை விளக்குப்போல 2) அத்தி பூத்தாற்போல
3) குடத்துள் விளக்குப்போல 4) ஊமை கண்ட கனவு போல

12) மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஆசிரியர்களுக்கு (seminar) செமினார் நடாத்தப்பட்டது இங்கு Seminar என்பதன் தமிழ்ச்சொல்
1) கருத்தரங்கு 2) செயலமர்வு
3) விமர்சனம் 4) வழிகாட்டல்

13) பின்வருவனவற்றுள் பாரசீக மொழிச் சொல்
1) துட்டு 2) சலம் 3) திவான் 4) சாவி

14) அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன
1) ஐம்பொறி 2) ஐம்பால் 3) சால்பு 4) ஐந்திணை

15) வெட்டவெளி என்பது
1) இணைமொழித் தொடர்பு 2) அடுக்குத் தொடர்
3) மரபுத் தொடர்பு 4) அடுக்கிடுக்குத் தொடர்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) குழந்தைப் பிள்ளைக்கும் குட்டி நாய்க்கும் இடம் கொடுத்தல் கூடாது. இடம் கொடுத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
1) வசிக்க இடம்கொடுத்தல் 2) எதற்கும் இடம்கொடுத்தல்
3) கண்டிப்பின்றி வளர்த்தல் 4) வறுமைப்படாது காத்தல்

17) "ஒருவனது அறிவு முதலியவற்றை ஆராய்தல்" எனும் பொருள் தரும் மரபுத்தொடர்
1) ஆழம் பார்த்தல் 2) ஆளை அறிதல்
3) ஆற்றுப்படுத்தல் 4) அள்ளியிறைத்தல்

18) பின்வருவனவற்றுள் "இன்பதுன்ப" உணர்வினை புலப்படுத்தப் பயன்படுத்தும் தொடர்
1) ஆடிப்பாடி 2) சுக துக்கம்
3) எதிரும் புதிரும் 4) ஆசாபாசம்

19) "எமக்கு உதவி செய்தவர்களுக்கு ஒருபோதும் துரோகம் செய்யக் கூடாது" எனும் பொருளைத் தரும் பழமொழி
1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
2) அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே
3) ஊரோடு ஒத்துவாழ் 4) எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்

20) "ஆசிரியர்" மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார் என்பதைப் புலப்படுத்த பொருத்தமான உவமைத் தொடர்
1) வெள்ளிடை மலை போல
2) ஓரச்சில் உருக்கி வார்த்தாற் போல
3) கலங்கரை விளக்கம் போல
4) அடுத்தது காட்டும் பளிங்கு போல

21) பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணமாக அமைவது
1) மரவேர் 2) கடலலை 3) கோவில் 4) கற்பாறை

22) "கடிநாய் துரத்தியது" கடிநாய் என்பது
1) பண்புத்தொகை 2) உவமைத்தொகை
3) உம்மைத்தொகை 4) வினைத்தொகை

23) பின்வருவனவற்றுள் தொழிற்பெயராக அமைவது
1) மரம் 2) வைத்தியசாலை 3) கோடை 4) பொங்கல்

24) நினைவில் வைத்திருக்கின்றேன். இங்கு "இல்" உருபு உணர்த்தி நிற்கும் பொருள்
1) இடப்பொருள் 2) கொடைப்பொருள்
3) நட்புப்பொருள் 4) நீங்கற் பொருள்

25) படித்திலன் என்பதில் வந்துள்ள எதிர்மறை இடைநிலை
1) படி 2) த் 3) இல் 4) அன்

26) ஓடும் குதிரை என்பதில் இடம்பெற்றுள்ள பெயரெச்ச விகுதி
1) ஓடு 2) உ 3) உம் 4) ஐ

27) "கண்ணனும் பாடினான்" இங்கு வந்துள்ள உம் இடைச்சொல் உணர்த்தி நிற்கும் பொருள்
1) தோற்றம் 2) பிரிநிலை
3) உயர்வுசிறப்பு 4) எச்சம்

28) "நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள் அறிந்தாள் நளன் தனை ஆங்கு" என்ற பாடலடியில் வந்துள்ள பயனிலை
1) அன்னாள் 2) விரும்பும் 3) அறிந்தாள் 4) ஆங்கு

29) பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர் குற்றியலுகரமாக அமைவது
1) ஆடு 2) பயறு 3) பஞ்சு 4) சால்பு

30) பின்வருவனவற்றுள் நிறுத்தற் குறிகள் சரியாக இடம்பெற்றுள்ள வாக்கியம்
1) மேகம் கறுத்தது. மழை கொட்டியது. வெள்ளம் பாய்ந்தது.
2) மேகம் கறுத்தது! மழை கொட்டியது! வெள்ளம் பாய்ந்தது.
3) மேகம் கறுத்தது: மழை கொட்டியது : வெள்ளம் பாய்ந்தது:
4) மேகம் கறுத்தது: மழை கொட்டியது: வெள்ளம் பாய்ந்தது.

**பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.**

31. பழைய காலத்திலே ஆசிரியரைத் தேடி அவரிடம் சென்று, அவருக்கு வேண்டிய பணிவிடை செய்து மாணவர்கள் கற்று வந்தார்கள். மாணவர்களைத் தேடி ஆசிரியரிடம் சென்று படிக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. மகாபாரத காலம் வரை ஆசிரியரைத் தேடியடையும் வழக்கமே இருந்தது.
1) மகாபாரத காலத்தில் ஆசிரியரைத் தேடிச் சென்று கற்றனர்.
2) பழங்காலத்தில் ஆசிரியரைத் தேடிச் சென்றே மாணவர் கல்வி கற்றனர்.
3) மாணவர்கள் ஆசிரியருக்குப் பணிவிடை செய்தனர்.
4) ஆசிரியருக்கு பணிவிடை செய்தலே கற்றல்.

32) மனிதன் பூமியில் பிறக்கும்போது பூரண குணாம்சங்களோடு பிறக்கின்றான். அவன் வளரும் பாதைகள் வெவ்வேறுபட்ட சூழலில் அமைவதால் குணாம்சங்களும் மாறுபடுகின்றன. சூழலே மனிதனது எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கின்ற காரணியாக விளங்குகின்றன.
1) மனிதன் வளரும் பாதை வெவ்வேறானவை.
2) மனிதன் பிறக்கும்போதே பூரண குணாம்சங்களுடன் பிறக்கின்றான்.
3) மனித வாழ்வைத் தீர்மானிக்கும் காரணியாக சூழல் விளங்குகின்றது.
4) பூரண மனிதன் வாழ்வில் மேம்பாடடைவான்.

**பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

33) நீதியின் வழியாலன்றி உலகத்தை
1) செம்மைப்படுத்த முடியும் 2) செம்மைப்படுத்த முடியாது
3) செம்மைப்படுத்த வேண்டும் 4) செம்மைப்படுத்தலாகும்.

34) இசையால் வசமாக
1) இதயமோ உண்டோ? 2) இதயத்தில் உண்டோ?
3) இதயத்திற்கு உண்டோ? 4) இதயம் உண்டோ?

35) வாழ்க்கையில் ஊக்கத்தோடு உழைப்பவரே
1) வெற்றி அடைவீர் 2) வெற்றி அடைவோம்
3) வெற்றி அடைவார் 4) வெற்றி அடைந்தார்.

**பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.**

36) 1) இருபதாம் நூற்றாண்டிலே தமிழ்மொழி பல துறைகளிலும் வளர்ந்து வருகின்றன.
2) இருபதாம் நூற்றாண்டிலே தமிழ்மொழி பல துரைகளிலும் வளர்ந்து வருகின்றது.
3) இருபதாம் நூற்றாண்டிலே தமிழ்மொழி பல துறைகழிலும் வழர்ந்து வருகின்றது.
4) இருபதாம் நூற்றாண்டிலே தமிழ்மொழி பல துறைகளிலும் வளர்ந்து வருகின்றது.

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37) வடமாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் தேர்தல் ------------------------------------ முனைப்போடு மேற்கொள்கின்றேன்.
1) விதப்புரையை 2) பரப்புரையை
3) நயப்புரையை 4) மதிப்புரையை

38) மின்கட்டண உயர்வைக் கட்டுப்படுத்த எதிர்க்கட்சிகளால் பாராளு மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ------------------ வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
1) கூட்டறிக்கை 2) சுற்றறிக்கை
3) மதிப்பீடு 4) பிரேரணை

39) கழிவுநீர் தேங்குவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி விழிப்பூட்ட மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறான பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40)
அ) மனித உணர்வுகள் பண்படுத்தப்பட்டு வெளிப்பாடாகும்போது பண்பாடு தோன்றுகின்றது.
ஆ) பண்பாடு என்பது அகம் சார்ந்தது.
இ) இதனால் வன்செயல்களும் அழிவுகளும் குழப்பங்களும் கட்டுக்கடங்காமல் பெருகிவிட்டன.
ஈ) இவையே உலக சமநிலை சீர்குலைவிற்கு காரணமாகின்றன.
உ) மனிதப் பண்பாடு சுருங்கியமையால் நிம்மதி குறைந்து கொண்டே போகின்றது.

1) இ, ஈ, உ, அ, ஆ 2) ஈ, உ, இ, ஆ, அ
3) ஆ, அ, உ, இ, ஈ 4) உ, இ, ஆ, அ, ஈ

## பகுதி II

01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
1) ஆகுபெயர் என்றால் என்ன?
2) ஆக்கப் பெயர் என்றால் என்ன?
3) தொகைநிலைத் தொடர்கள் எவை?
4) இடைநிலைகள் என்றால் என்ன?
5) தொழில் முறைக் கடிதத்தின் கூறுகளைத் தருக?

02. பின்வருவனவற்றுள் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து கட்டுரை வரைக.

அ) முயற்சி உடையார் வெற்றி பெறுவார் என்ற கருத்தை வெளிப் படுத்தும் சிறுகதை.

ஆ) இலங்கையின் பொருளாதார நெருக்கடி மாணவ சமூகத்தை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றிய விளக்கக்கட்டுரை

இ) விண்வெளி ஆய்வுகளுக்கு செல்லும் வாய்ப்பு உமக்குக் கிடைத்திருப்பதாக கற்பனை செய்து கற்பனைக் கட்டுரை

ஈ) புகையிரதத்தின் யாழ். வருகையும் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கி நிற்கும் சவால்களும் என்ற தலைப்பில் நீர் நிகழ்த்தும் மேடைப் பேச்சு.

03. சமூகச் சீரழிவு, கலாசார சீரழிவுகள் என்பதற்கு எதிராக சமூக விழிப் புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையிலே சமூக விழிப்புணர்வுக் கழகத்தி னால் வெளியிடப்படும் துண்டுப்பிரசுரம்.

## பகுதி III

01. பின்வரும் செய்யுள்களின் பெருளையும் அவற்றில் காணப்படும் சிறப்புக்களையும் எழுதுக.

அ)
மானம் குலங்கல்வி வண்மை அறிவுடமை
தாக தவமுயற்சி தாளண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திட பறந்து போம்.

ஆ)
மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரு மாசா ததனருகே சிற்றூறல்
உண்ணிடும் ஆகிவிடும்.

02) நிலவில் பேசுவோம் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.
அ) சிவப்பிரகாசம் என்ற பாத்திரத்தின் பண்புகள்
ஆ) தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்
இ) தீண்டாமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட வாதங்கள் எவை?
ஈ) கதையின் தலைப்பிற்கும் உள்ளகத்திற்கும் இடையில் காணப்படும் தொடர்பு.

# சைவசமயம்

1) விநாயகர் அங்கியுடன் சிவலிங்கம் காட்சி தரும் தலம்
1) மாமாங்கேஸ்வரம்
2) பொன்னம்பலவாணேஸ்வரம்
3) ஒட்டுசுட்டான் தான்தோன்றிஸ்வரம்
4) வல்லிபுர ஆழ்வார்

2) சைவசமயத்தின் முழுமுதற் கடவுள்
1) விநாயகர் 2) முருகன் 3) சிவபெருமான் 4) பிரம்மா

3) தாண்டகவேந்தர் என அழைக்கப்படுபவர்
1) சம்பந்தர் 2) சுந்தரர் 3) அப்பர் 4) மாணிக்கவாசர்

4) அபிராமிப்பட்டரின் இயற்பெயர்
1) பரமசிவானந்தம் 2) சதாசிவம்
3) கதாதரர் 4) சுப்பிரமணியம்

5) திருஞானசம்பந்தர் முத்தியடைந்த தினம்
1) சித்திரைச் சதயம் 2) வைகாசி மூலம்
3) ஆனிமகம் 4) ஆடிச்சோதி

6) கொற்றவன் முடிமுதலியார் என அழைக்கப்படுபவர்
1) மெய்கண்டதேவர் 2) அருணந்தி சிவாச்சாரியார்
3) மறைஞானசம்பந்தர் 4) உமாபதிசிவாச்சாரியார்

7) திருக்கோணேஸ்வர தீர்த்தத்தின் பெயர் என்ன?
1) பாவநாசம் 2) பாலாவி 3) கீரிமலை 4) கண்டசி

8) தந்தையை இழந்தவர் அனுட்டிக்கும் விரதம்
1) விநாயக விரதம் 2) சித்திரா பௌர்ணமி
3) ஆடி அமாவாசை 4) பங்குனி உத்தரம்

9) கடவுளுக்குரிய இருவித நிலைகளும் எவை?
1) தடத்தநிலை, சொரூபநிலை 2) முன்னிலை, படர்க்கைநிலை
3) அருவம், உருவம் 4) மகேஸ்வரன், சதாசிவன்

10) திருக்கோயிலில் செய்யத்தக்கது
1) பெண்கள் அங்கப்பிரதட்சணம்
2) ஆண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல்
3) ஓடியாடி விளையாடுதல்
4) அமைதி பேணுதல்

11) மனிதனிடம் அகங்கை, மமதை இருக்கக்காரணம்
1) மாயை 2) கன்மம் 3) ஆணவம் 4) இறைவன்

12) திருமணத்துடன் தொடர்புபட்ட அறம்
1) துறவறம் 2) இல்லறம் 3) பிரம்மச்சாரியம் 4) வானப்பிரஸ்தம்

13) மூர்த்தி, தலம், தீர்த்தம் சிறப்புக்களை கொண்டிருக்கவேண்டியது.
1) வீடு 2) ஆலயம் 3) பாடசாலை 4) மடம்

14) நாவலர் மணிமண்டபம் அமைந்துள்ள இடம்
1) கொழும்பு 2) மட்டக்களப்பு 3) நல்லூர் 4) வண்ணார்பண்ணை

15) நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பாடியவர்
1) ஆழ்வார்கள் 2) நாயன்மார்கள்
3) தேசிகர் 4) சந்தானகுரவர்

16) ஆலமுண்டகண்டன், விடமுண்டகண்டன் என்ற பெயர்களாற் போற்றப்படுபவர்
1) விஸ்னு 2) பிரம்மா 3) ஆலாலசுந்தரர் 4) சிவபெருமான்

17) மகரசங்கிராந்தி எனப்படும் பண்டிகை
1) சித்திரை வருடப்பிறப்பு 2) தைப்பொங்கல்
3) தீபாவளி 4) ஆடிப்பிறப்பு

# உயிலங்குளம் பிரதேசத்தில் 50 வீடுகள் நிர்மாணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட உயிலங்குளம் மாதிரி வீட்டுத்திட்டப் பிரதேசத்தில் இந்திய அரசின் 50 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேசசெயலர் அறிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் உள்ள மக்கள் யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து 2012 ஆம் ஆண்டு மீள்குடியேறி அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வரும் இம்மக்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகளை வழங்கும் வகையில் இந்திய அரசினால் 50 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் குடிநீர் வசதிகள், வீதிப்புனரமைப்பு போன்ற வசதிகளும் இன்மையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் இத்தகைய வசதிகளை குறிப்பாக குடிநீர் வசதியை ஏற்படுத்துமாறும் வீதிப் புனரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து குடிநீர் தேவையை நீக்கும் முகமாக இப்பிரதேசத்தில் குழாய்க்கிணறு மற்றும் திறந்த கிணறு என்பன அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சீரணி நாகபூஷணி அம்மனுக்கு வருடாந்த மஹோற்சவம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை மாலை தெப்பத்திருவிழாவும் 3 ஆம் திகதி கைலாச வாகனத் திருவிழாவும், 10 ஆம் திகதி மாலை மாம்பழத் திருவிழாவும், 12 ஆம் திகதி மாலை மஞ்சத் திருவிழாவும், 13 ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி காலை 2 மணிக்கு விசேடபூசைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளும், முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. 17 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. இதில் கிரியைகளை சிவஸ்ரீ கு.சோமஸ்கந்த குருக்கள் ஆற்றவுள்ளார்.

# "விசையுறு பந்தினைப்போல்" நூல் வெளியிடப்பட்டது



உயில் கலை இலக்கிய சங்கத்தின் இரண்டாவது வெளியீடாக சி.விமலன் எழுதிய "விசையுறு பந்தினைப்போல்" என்ற விளையாட்டுத்துறைசார் பத்தி எழுத்துக்களைக் கொண்ட நூலின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறறது. நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை முன்னாள் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் பிரதமவிருந்தினராகவும், வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எம்.ராஜாரணசிங்க சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். வரவேற்புரையை வவுனியா வளாக கணனி விஞ்ஞானத்துறை விரிவுரையாளர் வி.செந்தூரன் நிகழ்த்தினார். நூல் வெளியீட்டுரையை வடமராடசி உதைபந்தாட்ட லீக் செயலாளரும் கிராம அலுவலருமான தி.வரதராஜன் நிகழ்த்தினார்.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் நூலை வெளியிட சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட எஸ்.எம்.ராஜாரணசிங்க பெற்றுக்கொண்டார். மதிப்பீட்டுரையை யாழ்ப்பாண கிரிக்கெட் மத்துயஸ்தர் சங்க முன்னாள் தலைவரும் இலங்கை மெய் வல்லுநர் சங்க தொழில்நுட்பக் குழு உறுப்பினருமாகிய ப.முருகவேல் நிகழ்த்தினார். ஏறபுரையை நூலாசிரியர் சி.விமலன் நிகழ்த்தினார். மேற்படி நிகழ்வு வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (90,70,48)




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................


பெற்றோர் கையொப்பம்



தினமுரசு பத்திரிகை நிறுவனத்தின் கல்விமுரசு பிரிவினால் நடாத்தப்பட்ட புதிர்ப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் தினமுரசு நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களான ஸ்ரீகரன் சியாமி, அன்ரனிசாள்ஸ் மற்றில்டா, மரியதாஸ் அன்டிலுக்ஷி, இராமேஸ்வரன் கஜிந்தன், தி.றொகானி ஆகியோருக்கான பரிசில் வழங்கப்படுவதையும் பரிசுபெற்ற மாணவர்கள் மற்றும் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# நான் பலவீனமான பிரதமர் இல்லை பா.ஜ.கவுக்கு இதனை நிரூபிப்பேன்

## உறுதியளிக்கிறார் மன்மோகன்



(புதுடில்லி)

மன்மோகன் சிங்கையும், அவரின் பிரதமர் பதவியையும் பாரதிய ஜனதாகட்சி கடுமையாக விமர்சித்து வருகிறது. இக்கட்சியின் விமர்சனங்களுக்கு பதில் ஏதும் அளிக்காமல் பல நாட்களாக அமைதியாக இருந்த பிரதமர் மன்மோகன் சிங் தற்போது, பாரதிய ஜனதாக்கட்சி கூறுவது போல் தான பலவீனமான பிரதமர் இல்லை என்பதை நிரூபிக்க உள்ளேன் என்றார்.

மன்மோகனின் 10 ஆண்டு ஆட்சி குறித்து காங்கிரஸ் தலைவர்கள் சோனியாவும், துணைத் தலைவர் ராகுலும் பாராட்டுக்களை பொழிந்து வருகின்றனர். இதனால் மகிழ்ந்த மன்மோகன் சிங்கும், தேசிய முற்போக்கு கூட்டணி அரசின் ஆட்சி காலத்தை விட ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் ஆட்சி காலத்தில் நாடு மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளதாக கூறி வந்தார். இருப்பினும் பா.ஜ. மன்மோகன் சிங் பலவீனமான பிரதமர் எனவும், அவரது ஆட்சியில் தான் ஊழல்கள் அதிகம் நடைபெற்றதாகவும் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது. இது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மன்மோகன் சிங், இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாரதிய ஜனதாகட்சி தொடர்ந்து என்னை குறித்து விமர்சித்து வருகிறது நான் பலவீனமான பிரதமர் என கருதுகின்றனர் இவ்வாறு விமர்சித்தால் காங்கிரஸ் எனக்கு அளித்துள்ள பிரதமர் பதவியை விட்டு நான் ஓடி விடுவேன் எனவும் நினைக்கின்றனர் ஆனால் அவர்கள் கூறுவது தவறு என நான் நிரூபிப்பேன்.

அதனைத்தொடர்ந்து காங்கிரஸ் தலைமையிலான அரசில் ஊழல் முற்றிலும் ஒழிக்கப் படும் என எனக்கு நம்பிக்கை உள்ளது. அனைத்து பிரச்சினைகளையும் சமாளித்து, மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் வகையில் புதிய காங்கிரஸ் அரசு அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆடைத்தொழிற்சாலையில் தீ விபத்து 11 பேர் பலி;



(பீஜிங்)

தெற்கு சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள புனிங் பகுதியில் செயற்பட்டுவரும் உள்ளாடைத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் மதியம் திடீரென்று தீவிபத்து ஏற்பட்டது. 208 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்திருந்த இந்தத் தொழிற்சாலையில் மளமளவென்று பரவிய தீயினைத் தடுக்க அம்மாகாணத்தின் தீயணைப்புத்துறை அழைக்கப்பட்டது.

ஆனால் இதற்கிடையில் 11 பேர் பலியாகியதாகவும் 17 பேர் காப்பாற்றப்பட்டதாகவும் மாநில ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. காப்பாற்றப்பட்டவர்களிலும் 15 பேருக்கு தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டுவருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

தொழில்துறை வளர்ச்சியிலும், கட்டுமானப் பணிகளின் மேம்பாட்டிலும் மேற்கத்திய நாடுகளுக்கு சவால்விடும்விதமாக வளர்ந்துள்ள சீனா சுற்றுப்புற சூழல் வளங்களில் தற்போது பெரும் பிரச்சினைகளைச் சந்தித்துவருகின்றது. இதுமட்டுமின்றி தொழில்துறை நிறுவனங்களில் அடிக்கடி ஏற்படும் விபத்துகளும் அந்நாட்டை பாதிப்பதாக அமைகின்றன.

# போப் பிரான்ஸை சந்தித்தார் ஒபாமா



உக்ரைனின் நெருக்கடி குறித்து மேற்கொள்ளப்பட்ட தனது ஐரோப்பியப் பயணத்தின் மூன்றாவது கட்டமாக அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா நேற்று ரோம் நகருக்கு பயணம் மேற்கொண்டார். அங்கு அவர் போப் பிரான்சிசை முதன்முதலாக சந்தித்ததாகவும் அவரது தலைமை குறித்த பாராட்டுதல்களை ஒபாமா அவரிடம் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


மேலும் ரஷ்யாவின் ஊடுருவல் தொடருமானால் அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ஆழமான பொருளாதாரத் தடைகளை விதிப்பது குறித்து விவாதித்ததாக ஒபாமா நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

நெதர்லாந்தில் நடைபெற்ற அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டிலும் அதன்பின்னர் பிரஸ்ஸல்சில் நடைபெற்ற உலக நாடுகளின் உச்சி மாநாட்டிலும் அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா பங்கு பெற்றார். ரஷ்யா உலக நாடுகளின் எதிர்ப்புகளுக்கிடையே கிரிமியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது தொடர்பான அழுத்தங்கள் அந்தக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன.

## உலகச் செய்திகள்

# ஜெயலலிதாவுக்கு பிரதமர் பதவி கிடைத்தால் ஜனாதிபதி மாளிகை இட்லி கடையாக மாறிவிடும்

## திண்டுக்கல் லியோணி தெரிவிப்பு



ஜெயலலிதா பிரதமரானால் ஜனாதிபதி மாளிகை இட்லி கடையாக மாறும் என்று திண்டுக்கல் லியோனி தெரிவித்தார்.

திருநீர்மலை அடுத்த லட்சுமி புரத்தில் ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.க வேட்பாளர் ஜெகத்ரட்சகனை ஆதரித்து உரையாற்றும் போதே திண்டுக்கல் லியோனி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆட்சியில் உள்ள அமைச்சர்களின் நிலைமை பரிதாபமாக உள்ளது. சுழல் விளக்கு கொண்ட கார், பாதுகாப்புக்கு பொலிஸ் இருந்தும் தொடை நடுங்கி அமைச்சர்களாக உள்ளார்கள்.

பொதுக்கூட்ட மேடை அமைக்க ஜாதகம் பார்க்கும் ஜெயலலிதாவால், அரசை எப்படி நடத்த முடியும் ஜெயலலிதா பிரதமர் ஆனால், ஜனாதிபதி மாளிகையை இட்லி கடையாக மாற்றிவிடுவார்.

மேலும் தமிழகத்தில் ஜனநாயகம் செத்து விட்டது. தி.மு.க ஆட்சியின் நிர்வாக திறமையால் தமிழகம் முன்னேற்ற பாதையில் சென்றது. தற்போது கடும் விலைவாசி உயர்வால் தமிழகம் பின்னோக்கி செல்கிறது.

150 ஆண்டுகால கனவான சேதுசமுத்திர திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என தி.மு.க போராடி வருகிறது. ஆனால், இந்த திட்டத்தை தமிழக அரசு முடக்க நினைக்கிறது. சேது சமுத்திர திட்டம் நிறைவேறினால வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் தொழில் வளர்ச்சி அடையும் எனவும் தெரிவித்தார்.

# மலேசிய விமானத்தின் பாகங்கள் இந்திய கடலில் மிதக்கின்றன

## மலேசிய அமைச்சர் தகவல்

மலேசிய விமானத்தின் பாகங்கள் என சந்தேகிக்கப்படும் 122 பொருள்கள் தெற்கு இந்திய பெருங்கடலில் மிதந்து வருவதாகவும், அப்பகுதியில் தேடும் பணியை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் மலேசிய அமைச்சர் ஹிஷாமுதீன் ஹுசைன தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து சீனாவின் பெய்ஜிங் நோக்கி கடந்த 8ஆம் திகதி புறப்பட்ட எம்.எச். 370 விமானம், ரேடாரின் கண்காணிப்பிலிருந்து மறைந்து திடீரென மாயமானது. அந்த விமானம் தெற்கு இந்திய பெருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளாகி இருக்கும் என கருதப்படுகிறது. அங்கு நடைபெற்று வந்த தேடுதல் பணிகள், மோசமான வானிலை காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை நிறுத்திவைக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை காலை வானிலையில் முன்னேற்றம் காணப்பட்டதைத் தொடர்ந்து, தேடுதல் பணி மீண்டும் தொடங்கியது. அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென் கொரியா ஆகிய நாடுகள் தேடுதல் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

'பிரான்ஸின் செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட படங்களை ஆய்வு செய்ததில் தெற்கு இந்திய பெருங்கடலில் விமானத்தின் 122 பொருள்கள் மிதப்பது தெரியவந்துள்ளது. பெர்த்தில் இருந்து 2,557 கி.மீ. தூரத்தில் கடல் பகுதியில் மிதந்து வரும் அந்த பொருள்களின் அளவு ஒரு மீற்றர் நீளம் முதல் 23 மீற்றர் நீளம் வரை உள்ளதாகத் தெரிகிறது. தேடுதல் பணியை முன்னின்று நடத்தி வரும் ஆஸ்திரேலியாவுக்கு இந்த புகைப்படங்களை அனுப்பிவைத்துள்ளோம்.

அவை அனைத்தும் விமானம் விழுந்து கிடக்கும் இடத்தை அறிய உதவியாக இருக்கும் என நம்புகிறோம் என்றார்.

# இராணுவ தலைமைப் பதவியை ராஜினாமா செய்தார் அப்டெல் பட்டா



எகிப்து நாட்டின் அதிபராக செயல்பட்டுவந்த முகமது மோர்சி கடந்த ஆண்டு ஜூலை மாதம் அந்நாட்டு இராணுவத் தலைமையினால் பதவி இறக்கம் செய்யப்பட்டு இடைக்கால அரசாங்கம் பொறுப்பை ஏற்றது. அவருடன் இணைந்து செயற்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினர் பலரும் கைது செய்யப்பட்டு விசாரணையை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் ஏற்பட்ட கலவரங்களும், வன்முறைகளும் இன்னும் ஓயாதநிலையில் அடுத்த மாதம் அங்கு அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. பெரும்பான்மையானோரின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது இராணுவத் தலைமைப் பதவியை ராஜினாமா செய்வதாக நேற்று முன்தினம் அந்நாட்டின் இராணுவத் தலைவர் அப்டெல் பட்டா எல்-சிசி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஒளிபரப்பப்பட்ட ஒரு தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இராணுவ உடையுடன் தோன்றிய சிசி தேசத்தைப் பாதுகாப்பதற்காவும், மக்களின் அழைப்பை ஏற்று செயற்படுவதற்காகவும் தான் அதிபர் தேர்தலில் போட்டியிட உள்ளதாகத் தெரிவித்தார். இராணுவ சீருடையில் தான் தோன்றுவது இதுவே கடைசி முறை என்பதையும் அவர் தெரிவித்தார். பொதுமக்கள் மட்டுமே அதிபர் வேட்பாளர்களாகப் போட்டியிடமுடியும் என்று எகிப்தின் சட்டம் தெரிவிப்பதால் பாதுகாப்புத்துறை அமைச்சர் மற்றும் இராணுவத் தலைவர் என்ற தன்னுடைய அனைத்துப் பதவிகளையும் சிசி ராஜினாமா செய்துள்ளார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட மோர்சி ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டுவரும்போதிலும் சிசியின் வெற்றி உறுதியானது என்றே அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்

# எரிபொருள் நிலைய சர்ச்சை; சுமுகமாகத் தீர்க்க முயற்சி

யாழ். கண்டி வீதியில் எரி பொருள் நிரப்பு நிலையம் அமைப்பது குறித்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் ஆராயப்பட்டு வருகின்ற நிலையில் சபையில் அந்த விடயங்களை வாதிடுவதை தவிர்க்குமாறு யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று யாழ். மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அதன்போது, யாழ். கண்டி வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான அனுமதி யாழ்.மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் செ.பிரணவநாதனினால் அனுமதி வழங்கப்பட்ட நிலையில், தற்போது எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அனுமதி வழங்கப்பட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து நட்டஈடு வழங்குமாறு கோரிக்கை விடுத்தால், அந்த நட்டஈட்டினை மாநகர சபை வழங்க வேண்டும் அது முடியுமா என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு முதல்வர் பதிலளிக்கையில், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடாத்திய கூட்டத்தின் போது, எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பது குறித்து பொது மக்களின் கருத்துக்களையும், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்தார்.

அதன்போது, எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பது குறித்து குழு ஒன்று நியமித்து ஆராய்ந்து வருவதுடன், நீதிமன்றின் ஊடாக பிரச்சினையினை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், இங்கு அந்த விடயம் பற்றி வாதப் பிரதிவாதங்கள் வேண்டாமென்று சபையில் தெரிவித்தார். (25)

## இது அரசுக்கு...

நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் மனித உரிமை பேணல் ஆகியன தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு பூரண ஆதரவளிக்கத் தயார் என்பதே இந்த தீர்மானம் வலியுறுத்தி நிற்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை, இலங்கை மனித உரிமை நிலைமைகளை கண்காணிக்குமாறு தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அனைத்து இலங்கையர்களினதும் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் நெருக்குதல்களுக்கு உள்ளானமை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். நாட்டின் அனைவருக்காகவும் அமெரிக்கா குரல் கொடுக்கும் என ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

## காலை...

விரைவாக அமுல்படுத்தப்படும் என தாம் நம்புவதாகவும். அதற்கு சகல நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் புதிய தலைமுறை தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நிறைவேறியது...

முடியும் என்றும் அமெரிக்கா கூறியது.

மற்ற இணை அனுசரணை நாடுகளும் நிதிவளம் இல்லை என்ற வாதத்தை எதிர்த்துக் கருத்து வெளியிட்டன.

இறுதியாக தீர்மானத்திற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பின்படி பிரேரணைக்கு ஆதரவாக 23 நாடுகளும் எதிராக 12 நாடுகளும் வாக்களித்துள்ளன. 47 நாடுகளை கொண்ட இந்த கவுன்ஸிலில் 12 நாடுகள் நடுநிலை வகித்துள்ளன.

ஆதரவாக

ஆர்ஜன்டினா, ஒஸ்ரியா, பெனின், பொட்ஸ்வானா, பிரேஸில், சிலி, கொஸ்டாரிகா, கோர்டிவோரின், செக்குடியரசு, எஸ்தோனியா, பிரான்ஸ், ஜேர்மன், அயர்லாந்து, இத்தாலி, மெக்சிகோ, மொன்டிநீக்ரோ, பெரு, கொரியா, ருமேனியா, மாக்கடோனியா, சியாராலியோன், பிரித்தானியா, அமெரிக்கா.

எதிராக

அல்ஜீரியா, சீனா, கொங்கோ, கியூபா, கென்யா, மாலைதீவு, பாகிஸ்தான், ரஷ்யா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம், வெனிசூலா, வியட்நாம்.

நடுநிலை

புருக்கினோ பாசோ, எத்தியோபியா, காபன், இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், கஸகிஸ்தான், குவைத், மொரோக்கோ, நமீபியா, பிலிப்பைன்ஸ், தென்னாபிரிக்கா.

அதேவேளை, அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் கொண்டுவரப்படும் தீர்மானத்துக்கான வாக்கெடுப்பில் இருந்து தாம் விலகி இருப்பதாக இந்தியா அறிவித்தது.

வாக்கெடுப்புக்கு முன்னதான விவாதத்தின் போது உரையாற்றிய, மனித உரிமைகள் ஆணைக குழுவுக்கான இந்தியத் தூதுவர் திலிப் சின்ஹா, இந்தத் தீர்மானம் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காகவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்படும் உள்நாட்டு நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதற்குப் பதிலாக அதனை சிக்கலாக்கிவிடும் என்பதால், இதற்கான வாக்கெடுப்பில் இருந்து இந்தியா விலகி இருப்பது என்று தீர்மானித்துள்ளதாகக் கூறினார்.

இலங்கையால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவான பங்களிப்பை வழங்குவதற்குப் பதிலாக இந்தத் தீர்மானம் அவற்றின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்திவிடும் என்று இந்தியத் தூதுவர் குறிப்பிட்டார்.

## அரசு தவறு...

தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான கலந்துரையாடல்கள் எதிர்காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென்பதுடன் இதன் போது மக்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று சொல்லப்படுகின்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள், மீளக்குடியமர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர், நிரந்தரக் காணியுடையோர் மற்றும் காணியற்றோர் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்திய வீட்டுத்திட்ட தெரிவுகளின் போது நியாயத்தினதும் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அமைச்சர் வலியுறுத்தியதுடன் நலன்புரி நிலையங்களில் உள்ளோரை மீள்குடியேற்றுவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வரும் நிலையில் மீள்குடியேற்றப்படவுள்ள மக்களது விபரங்கள் தொடர்பிலும் மீளாய்வு செய்யப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்கள் மற்றும் அங்கு தங்கியுள்ள குடும்பங்களின் பூரண விபரங்களை கிராம சேவையாளர்கள் உரிய முறைப்படி திரட்ட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்ட அமைச்சர், வாழ்வின் எழுச்சி மற்றும் விசேட தேவையுடையோருக்கான உதவித்திட்டங்கள், சமுர்த்தி, சுற்றுச்சூழல், விவசாயம், சிறுவர்களை நல்வழிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் துறைசார்ந்தோர் விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது, குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கிராமசேவை உத்தியோகத்தர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கேட்டறிந்து கொண்ட அமைச்சர் நாம் அரசில் அங்கம் வகித்து வருகின்ற போதிலும் அரசு தவறிழைக்கும் பட்சத்தில் அதற்கு ஒருபோதும் துணைபோக மாட்டோம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், அமைச்சரின் ஆலோசகர்களான சி.தவராசா, சுந்தரம் டிவகலாலா, அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன் உட்பட்ட பிரதேச செயலர்களும் உடனிருந்தனர்.

## கூட்டமைப்பை...

இதனிடையே, தேர்தல் காலங்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் உணர்ச்சிப் பேச்சுக்களை நம்பி நாம் வாக்களித்திருந்தோம்.

ஆனால், எமது வாக்குகளைப் பெற்றும் அவர்களால் எவ்விதமான அபிவிருத்தி மேம்பாட்டுப் பணிகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் நாம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டே வருகின்றோம் என்றும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

அத்துடன், சங்கானை பிரதேச சபையினரால் சந்தையின் கழிவகற்றல் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாததினால் அப்பகுதியின் சுகாதாரம் மிக மோசமான நிலையை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் சங்கானை மீன்சந்தைக்கான காணி விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டதுடன், அதுவிடயம் தொடர்பில் துறைசார்ந்தோர் ஊடாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை முன்னெடுப்படுமெனத் தெரிவித்தார்.

இதன்போது, சங்கானைப் பிரதேச செயலர் சோதிநாதன், யாழ். மாவட்ட கமநல திணைக்கள ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), சங்கானை பிரதேச சபை செயலாளர் திருமதி உருத்திரா சம்பவன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஏற்கமுடியாத...

சர்வதேச ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தீர்மானத்தை நிராகரிப்பதாகவும், தீர்மானம் நல்லிணக்க முனைப்புக்களை பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தீர்மானத்தினால் தளர்ந்து விடப் போவதில்லை எனவும், தொடர்ந்தும் நல்லிணக்க முனைப்புக்களை முன்னெடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மான வாக்கெடுப்பு திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 47 நாடுகள் வாக்களிக்கத் தகுதியுடையவை என்ற போதிலும், 23 நாடுகள் மட்டுமே இலங்கைக்கு எதிராக வாக்களித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

12 நாடுகள் எதிராகவும், 12 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமை வரவேற்கப்பட வேண்டியது என சுட்டிக்காட்டியுள்ளது. அதாவது அரசாங்கம் உறுப்பு நாடுகளில் 24 நாடுகளை திருப்தி அடையச் செய்துள்ளது என தெரிவித்துள்ளது.

எனவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வாக்கு வித்தியாசம் திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

## குடிநீர்...

வருகின்றது. இவ்வாண்டு கடும் வறட்சி நிலை நிலவுகின்றது. இதனால் மக்கள் குடிதண்ணீர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் இடத்தினை நோக்கி நகருகின்றனர்.

எனவே தீவக மக்கள் நன்மையடையக்கூடியவாறு திட்டங்களை முன்வைத்து நகரவேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட நீர்வள சபையின் வடக்கு பிரதிப் பொது முகாமையாளர் கருணாரட்ணம் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டு நீர் மாசுபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் நைதரசன் அளவு கூடியது மிகப்பாதிப்பாகும். மேலும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு வழங்கக்கூடிய அளவுக்கு குடிதண்ணீர் கிடைப்பனவு போதுமானதன்று.

மொத்த யாழ். குடா சனத்தொகையில் 20 வீதமானவர்களுக்கு மட்டுமே குடிதண்ணீர் கிடைக்கின்றது. எனவே யாழ். குடாநாட்டுக்கு குடிதண்ணீர் வழங்கக்கூடிய நிலை தொடர்பாக அவசர ஆய்வு ஒன்றினை முன்வைத்து செயற்படுத்த வேண்டும். இதனை அரசாங்க அதிபர் முன்னெடுத்து ஆய்வினை நடைமுறைப்படுத்த குழு ஒன்று அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (92)

## மிரட்டிப்...

மாற்று வழியின்றி தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுடன் சில நாடுகள் மிகச் சிறந்த பொருளாதார உறவுகளைப் பேணி வருவதாகவும் இதனால் தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் நாட்டில் ஆட்சி மாற்றத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர் எனவும் உள்நாட்டில் தேர்தல்கள் மூலம் செய்ய முடியாதவற்றை சர்வதேச ரீதியில் மேற்கொள்ள முயற்சிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தீர்மானத்தில் குறைபாடுகள் காணப்படுவதனாலேயே இந்தியா வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளும் அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடி பணியவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தீர்மானத்தின் 10 ஆம் பந்தியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் இலங்கை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளதாகவும், இந்த பந்தி நீக்கப்பட வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளை நேர்மையான முறையில் பக்கச்சார்பற்ற தன்மையுடன் விசாரணை நடாத்துவார் என எதிர்பார்க்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். தீர்மானத்திற்கு ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் கூடுதலாக ஆதரவளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும், உள்ளக பொறிமுறைமை ஒன்றின் மூலம் விசாரணை நடத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சமூக விடுதலைக்கான அடித்தளம் அழிந்து போனது வேதனைக்குரியது






இன விடுதலைக்காக உன்னதமான யுத்தம் நடைபெற்ற இந்த மண்ணிலே இன்று சமூக விடுதலைக்கான அடிப்படைத் தளங்கள்கூட அழிந்துபோயுள்ளமை வேதனைக்குரியது. ஆகவே, எமது கொள்கையின் அடிப்படையில் ஒடுக்கப்படும் சமூகங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கு நாம் எப்போதும் தயாராக உள்ளோம்.

சமூக விடுதலை நிர்ணயிக்கப்படாத நிலையில், தேசிய விடுதலையில் மட்டும் முனைப்புக்காட்டுவது என்பது பொருத்தப்பாடற்ற விடயம் என்பதை நாம் ஆழமாகப் புரிந்துகொண்டுள்ளோம். ஆனால், இன்றும் பலர் சமூகங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளைத் தோற்றுவிக்க முனைகின்றனர். ஆனால், அவர்கள் தமிழன் என்ற இன உணர்வு போர்வைக்குள் மறைந்து வாழ்கின்றனர். என நாடாளுமன்றஉறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

நேற்று பச்சிலைப்பள்ளி, பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குனர் சபை மற்றும் அங்கத்தவர்களுடனான கலந்துரையாடலின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் கூட்டுறவுத் துறைகள் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாகத்தினால் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் அதிக அக்கறை செலுத்தினோம். அதனடிப்படையில் மக்கள் மத்தியில் செயலாற்றும் அனைத்து அமைப்புகளும் மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகளில் அரசியல் நோக்கிலிருந்து நாம் எப்போதும் சிந்தித்ததில்லை எனக் குறிப்பிட்ட அவர்

ஜனநாயக ரீதியில் முறைப்படி தெரிவாகும் நிர்வாகங்களின் சீரான செயற்பாட்டிற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, அன்று நடைபெற்ற விடுதலைப் போராட்ட காலத்திலும் தேசிய இன விடுதலைக்காக மட்டுமன்றி சமூக விடுதலை சிந்தனையுடனும் நாம் செயற்பட்டோம் அதன் அடிப்படையில்தான் இன்றைய ஜனநாயகக் களத்திலே மக்கள் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு அனைத்து சமூகங்களுக்கும் சம அந்தஸ்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இவ்வாறான சங்கங்களை பலப்படுத்தி வருகின்றோம். ஏனெனில், சமூக விடுதலை நிர்ணயிக்கப்படாத நிலையில், தேசிய விடுதலையில் மட்டும் முனைப்புக்காட்டுவது என்பது பொருத்தப்பாடற்ற விடயம் என்பதை நாம் ஆழமாக புரிந்துகொண்டுள்ளோம். என்றார்.

பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பொன்னுத்துரையின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் இராசதுரை ஆகியோரும், சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களும், அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

# தமிழர்களுக்கு தனிச்சிறை; இது ஆஸி. அரசின் ஏற்பாடு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் தமிழர்களுக்கான சிறைச்சாலை ஒன்றை அந்த நாட்டு அரசு நிரந்தரமாகவே அமைத்துள்ளது. இலங்கை தமிழ் அகதிகளை வைத்து, அமெரிக்காவில் உள்ள குவாண்டனாமோ முகாமைப் போன்ற ஒரு சிறைக் கூடத்தை அவுஸ்ரேலிய அரசு செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறு 'த நியூயோர்க் ரைம்ஸ்' செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட போர் கைதிகளை தடுத்து வைபபதற்காக 2002 ஆம் ஆண்டு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஸ் குவாண்டனாமோ விரிகுடாவில் தடுப்பு முகாமை உருவாக்கியிருந்தார். இதில் சர்வதேச சட்டங்களை மீறிய பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இதேபோன்ற ஒரு முகாமையை அவுஸ்ரேலிய அரசு செயற்படுத்தி வருகிறது. அதில் இலங்கைத் தமிழ் அகதிகளை நீண்ட காலமாக விசாரணை இன்றி தடுத்து வைத்துள்ளது. இந்த முகாமில் கடந்த ஐந்து வருடங்களாக 46 இலங்கை அதிகள் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் மியன்மார், ஆப்கானிஸ்தான், குவைத் போன்ற நாடுகளைச் சேர்ந்த ஐந்து பேரும் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்று தெரிவித்து, அவுஸ்ரேலியாவின் புலனாய்வுத் தரப்பினரால் அவர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, சர்வதேச அகதிகள் சட்டத்தை அப்பட்டமாக மீறும் நடவடிக்கை என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பள்ளிவாசல் மீது கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

தம்புள்ள பள்ளிவாசல் மீது நேற்று முன்தினமிரவு 8.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் பின்பகுதி மூலமாக மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இத்தாக்குதலினால் பள்ளிவாசலுக்கு சிறிது சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்துள்ளது. தாக்குதல் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதிலும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கும் தம்புள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விக்கியின் கூற்றுக்கு கிளம்புகிறது கண்டனம்

பிரதான அரசியல கட்சிகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளது.

தேசியக் கட்சிகள் எவையும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை முழுமையாக வழங்குவதில்லை என்று சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் நிராகரித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தல் ஒன்றின் போது, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க விடுதலைப் புலிகள், வடக்கு மக்களுக்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை.

இதன்விளைவையே தற்போது வடக்கு மக்கள் அனுபவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# செய்தியாளர் மீது தாக்குதல் ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

(கிளிநொச்சி)

கடந்த 26 ஆம் திகதி அன்று கிளிநொச்சி பொதுச் சந்தையில் வைத்து கரைச்சி பிரதேச சபையின் ஊழியர்கள் மூவரால் பிராந்திய ஊடகவியலாளர் ஒருவருக்கு அவரது கடமைகளை செய்யவிடாது ஏற்படுத்திய இடையூறுகள் மற்றும் அவரது வீடியோ கருவி சேதமாக்கப்பட்டமைக்கு கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் தங்களின் வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அச்சங்கம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்

கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி பொதுச்சந்தையில் சக்தி தொலைக்காட்சியின் கிளிநொச்சி ஊடகவியலாளர் ஞான்சங்கரி சப்தசங்கரி தனது கடமையினைச் செய்யவிடாது தடுக்கப்பட்டதோடு, அவரது வீடியோ கருவியும் சேதமாக்கப்பட்டுள்ளது. ஏனைய ஊடகவியலாளர்களும் செய்தி சேகரிக்க விடாது தடுக்கப்பட்டு அவமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொதுச் சந்தையில் கரைச்சி பிரதேச சபையினரால் அனுமதிப் பத்திரங்கள் அற்ற, மற்றும் மாதாந்த பிரதேச சபைக்கான கட்டணங்கள் செலுத்தாதவர்களின் வியாபார நிலையங்கள் சீல் வைக்கப்பட்டது. கிளிநொச்சி பொதுச் சந்தையில் வெளிப்படையாக நடைபெற்ற இந்தச் சம்பவத்தை செய்தி சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியாளர்கள் கரைச்சி பிரதேச சபையின் சில உத்தியோகத்தர்களால் தடுக்கப்பட்டதோடு, ஒரு உடகவியலாளரின் வீடியோ கருவியும் சேதமாக்கப்பட்டதோடு, பலர் முன்னிலையில் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு இடையூறும் விளைவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்கள் தங்களின் கடமைகளின் போது இவ்வாறு தடுக்கப்பட்டதும், தாக்கப்படுவதுமானது அண்மையில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவம் இதுவாகும். எனவே இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராது ஊடகவியலாளர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதோடு அவர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என வலியுறுத்தும் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினர் கிளிநொச்சி பொதுச் சந்தையில் இடம்பெற்ற சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்படல் வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்து அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (29)

# சுகாதாரப் பகுதி மீது கழிவு ஒயில் வீச்சு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் பின்வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதி அலுவலகம் மீது நேற்றிரவு இனந்தெரியாதவர்களால் யன்னல்கள் உடைக்கப்பட்டு அதனூடாக கழிவு ஒயில் வீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது..

நேற்றிரவு யாழ். மாநகரசபைப் பகுதி அலுவலகத்தின் பின்புறமாக சென்ற இனந்தெரியாதவர்கள் யன்னல் கண்ணாடிகளை உடைத்துவிட்டு அதனூடாக கழிவு ஒயிலை அலுவலக உத்தியோகத்தரின் மேசை மீது வீசிச் சென்றுள்ளனர். (பா)



# 6 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து வெற்றி

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ரி20 உலகக் கிண்ணத் தொடரின் நேற்றைய போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பாக மஹேல ஜயவர்தன 89 ஓட்டங்களையும் டில்ஷான் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 19.2 ஓவர்கள் நிறைவில் 190 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இங்கிலாந்து அணி சார்பில் அலக்ஸ் ஷெல்ஸ் அபாரமாக விளையாடி சதம் அடித்தார்.

# மரண அறிவித்தல்

## M.A.N அன்ரனி

**(புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர்)**



இலக்கம் 24 மாட்டின் லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த M.A.N. அன்ரனி காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை மாலை 3.00 மணிக்கு இடம்பெற்று புனித பத்திரிசியார் பாடசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு செஞ்சோஞ்ஜி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 24, மாட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.